கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
26-11-1972
30 காசு




ஆஹா!
என்ன இனிமை,
என்ன சுவை!
பல வண்ண
காட்பரிஸ்
மில்க் சாக்கலேட்
ஜெம்ஸ்
GEMS
ஆட்டமும்
பாட்டும்
களிப்பூட்டுமே,
காட்பரிஸ்
ஜெம்ஸ்
இனிப்பூட்டுமே!
ரூ. 1
மட்டுமே



''நீங்க யாரு தெரியலையே ....?''

கோகுலம்

மலர் 1


இதழ் 16

★

நவம்பர் 26, 1972

பரிதாபி ௵

கார்த்திகை 11௳



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

-- பாரதியார்

''உங்களை எங்கே பார்த்திருக்கேன்?''

புகைப்படம் : ஹரலிங்கம்



சந்தா விவரம் :

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம் ரூ. 7-

ஆறு மாதம் ரூ. 3-50

வெளி நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

★

அட்டைப்பட யானை :

என்ன குழந்தைகளா? முன்னாலே நின்னு என்னை மறைச்சுடலாம்னு எண்ணமா?

வர்ணப் படம் : ஹரலிங்கம்

நியூட்ரின் வண்ணம் தீட்டும் போட்டி !





உங்கள் டீலரிடமிருந்து போட்டித்தாளை இன்றே வாங்குங்கள் !

NCM-394A/72 TAM

வயதுக்கேற்ப,
மூன்று குழுக்கள் :
'ஏ' 8 வயதுக்குள்
'பி' 8லிருந்து 10 வயதுக்குள்
'ஸி' 11லிருந்து 14 வயதுக்குள்

முதல் பரிசுகள்-3
ஒவ்வொன்றுக்கும் ரூ. 501/- ரொக்கம் + கைக்கடிகாரம் + பாக்கெட் ட்ரான்ஸிஸ்டர்
இரண்டாம் பரிசுகள்-9
கைக்கடிகாரங்கள்
மூன்றாம் பரிசுகள்-99
பாக்கெட் ட்ரான்ஸிஸ்டர்கள்
மற்றும் 333 சிறப்புப் பரிசுகள்

மிகவும் சுலபம் !

எவ்வாறு பங்கு கொள்வது: உங்கள் நியூட்ரின் டீலரிடமிருந்து போட்டித்தாளை வாங்கி, சித்திரத்தை வண்ண ஓவியமாக்கி மகிழுங்கள். ரூபாய் 1 விலையுள்ள நியூட்ரின் மிட்டாய் பாக்கெட்டிலுள்ள நியூட்ரின் முயலாரின் ஸ்டாம்பை போட்டித் தாளில் ஒட்டி, உங்களைப்பற்றிய விவரங்களைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.

''நியூட்ரின் வண்ணம் தீட்டும் போட்டி''
C/o. நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
பலமனேர் ரோடு, சித்தூர் (ஆ.பி.)

பரிசுக்குரிய ஓவியங்கள், சிறந்த ஓவியர்களின் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும்.

இன்றே வண்ண ஓவியம் தீட்டுங்கள்—
நீங்களே பரிசைப் பெறுபவராகலாம் !



ஆத்திசூடி

◂ ராஜாஜி ▸



தெய்வ மிகழேல்

அவரவர் தங்கள் சமயத்துக்கும் குலத்துக்கும் வழக்கத்துக்கும் அனுசரித்த தெய்வங்களை வணங்குகிறார்கள். பிறர் வணங்கும் தெய்வத்தை இழிவாகப் பேசக்கூடாது. எல்லா முறைகளும் தெய்வங்களும் ஒரு பரம்பொருள் வணக்கமேயாகும். பிறர் வணங்கும் தெய்வத்தை வேறாகப் பாவித்துக் கொண்டு இகழ்ச்சி சொல் பேசுவதும் வெறுப்பதும் அறியாமையாகும். கிறிஸ்துவர், முஸல்மான்கள், ஹிந்துக்கள், சைவர், வைஷ்ணவர் அனைவரும் ஒரே பரம்பொருளையேதான் பல பேர்கள் வைத்து வணங்குகிறார்கள்.



தேசத்தோ டொத்துவாழ்

நானா தேசங்களில் நானா விதமாக வாழ்வுக்கு வேண்டியவைகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஒருவன் தன் எண்ணப்படி தனி வழியில் வாழ எத்தனித்தால் பிறருக்கும் இடைஞ்சல் உண்டாக்குவான். தனக்கும் துன்பம் உண்டாக்கிக் கொள்வான். உன்னுடைய தேசத்தில் எல்லாரும் ஒப்புக்கொண்டு வாழும் அமைப்புக்கிணங்கியே நீயும் நடந்து கொள்ள வேண்டும். அதனால் உனக்குச் சிறிது கஷ்டம் நேரிட்டாலும் முடிவில் அதுவே அதிக சுகம் தரும். தேசத்தில் உள்ளவர் அனைவரும் சேர்ந்து ஒரு வாழ்வு நடத்துகிறார்கள். நீ மட்டும் வேறு வழியில் நடந்து ஒற்றுமை குலைக்கக் கூடாது.



தையல் சொற் கேளேல்

தையல் — வயது முதிர்ந்தபோதிலும் அனுபவ மடையாத மனைவி.

கல்வியறிவும் உலக அனுபவமும் இல்லாத மனைவியின் பேச்சைக் கேட்டு உன் சொந்த புத்தியை விட்டு விடாதே. இதனால் மனைவியுடன் கலந்து விஷயங்களை யோசிக்க வேண்டாம் என்று பொருள் அல்ல. ஒரு காரியத்தின் நன்மை தீமைகளை உன் அறிவையும் அனுபவத்தையும் செலுத்தி நன்கு ஆராய்ந்து முடிவுக்கு வர வேண்டும். மனைவியிடம் உனக்கு உள்ள அன்பினால் அறிவு இழந்து மயங்கிவிடக் கூடாது. காதலினால் புத்தி மயங்கும் என்று எச்சரிக்கை செய்யப் படுகிறது.




கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

அகாசுரனை அழித்தருளியது

அகாசுரன் என்பவனைக் கம்சன் கண்ணனை வதைக்குமாறு ஏவினான். பகாசுரனுடைய தம்பியாகிய அகாசுரன் மிகுந்த சீற்றத்துடன் வனத்தில் மலைப் பாம்பு வடிவாகக் கிடந்தான்.

கண்ணபிரான் இடைச் சிறுவர்களுடன் கோகுலங்களை மேய்த்து, யமுனையில் நீராடி, கட்டமுதை உண்டனர். ஒருவர் உணவை ஒருவர் எடுத்து உண்பதும், ஒருவரை யொருவர் பரிகசிப்பதும், ஆடுவதும், பாடுவதுமாக விளையாடி மகிழ்ந்தார்கள்.



வழியில் விண்ணளவும் உயர்ந்த வாயுடன் மலைப் பாம்பு எதிர்ப்பட்டது. நஞ்சைக் கக்குகின்ற கூரிய பற்களுடன், விஷக் காற்றை விடுத்து, இரு நாவுகளை நீட்டி, தலையை ஆட்டி அரக்கன் இரக்கமின்றி நின்றான். மலைப் பாம்பைக் கண்ட சிறுவர்கள் அஞ்சி நடுநடுங்கினார்கள். பாம்பு ஆயர் சிறுவர்களையும் ஆடு மாடுகளையும் குகை போன்ற பகு வாயில் விழுங்கியது. அப்போது பரந்தாமன் தம் தோழர்களைக் காக்கும் பொருட்டு மலைப் பாம்பின் வாயில் நுழைந்தார். அதனைக் கண்ட அமரர்கள் அஞ்சினார்கள். உள்ளே நுழைந்த கண்ணன் விசுவ ரூபம் எடுத்தார். வாயும் வயிறும் பிளந்து கண் பிதுங்கி மலைப் பாம்பாக இருந்த அகாசுரன் மாண்டான்.

கண்ணபிரான் தம் தோழர்களைப் பார்த்து 'நீங்கள் பயப்பட வேண்டாம்' என்று அருள் உரை புகன்று பிருந்தாவனத்தை அடைந்தார்.

பிரமன் செய்த பெருமாயை

ஒரு நாள் கோகுலங்களை ஓட்டிக் கொண்டு யமுனை நதிக்குச் சென்ற கண்ணன் இடைச் சிறார்களோடு ஆற்றங் கரையில் தயிர் அன்னம் அருந்தினார். மற்றப் பிள்ளைகளும் தங்கள் தங்கள் உணவுகளை உண்டு உவந்தார்கள். அப்போது எதிரில் புல் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளும் கன்றுகளும் திடீர் என்று மறைந்து விட்டன.

கோபாலச் சிறுவர்கள் ''கண்ணா! இங்கே புல் மேய்ந்து கொண்டிருந்த





கோகுலங்கள் எங்கே? வீட்டில் அம்மா அப்பா எங்களை அடித்து விரல்களை ஒடித்து விடுவார்களே!'' என்று கூறித் துயரப்பட்டார்கள்.

கண்ணன் காடெல்லாம் தேடியும் பசுக்குலங்கள் காணப்படவில்லை. முன் உணவு செய்த இடத்தை அடைந்தார். அங்கு கோபாலச் சிறுவர்கள் இல்லை. தமது மகிமையைச் சோதிக்கும் பொருட்டு பிரமதேவர் கோகுலங்களையும், கோபாலச் சிறுவர்களையும் ஒரு மலைக் குகையில் மறைத்து வைத்தார் என்பதை உள்ளுணர்வால் உணர்ந்தார். எத்தனை எத்தனை கன்றுகள், எத்தனை எத்தனை சிறுவர்களோ அத்தனை வடிவங்களையும் அவரே கொண்டார். ஆயர் பாடியை அடைந்தார். தாய் தந்தையர் தங்கள் குமாரர்கள் என்று கருதி மகிழ்ந்தார்கள். எந்த எந்தச் சிறுவன் எப்படி எப்படிப் பேசுவானோ, அது போல் எம்பிரான் பேசினார். கன்றுகளும் விளையாடின. ஒருவனே பலவாய் நின்று விளையாடினான். இவ்வாறு ஓராண்டு கழிந்தது.

பிரமதேவர் கண்ணபிரானது அருள் திருவிளையாடலைக் கண்டு நாணிப் பகவானிடம் வந்து அவரை வணங்கித் துதி செய்தார். அவரால் மறைந்திருந்த கன்றுகளும் கோபாலச் சிறுவர்களும் கண்ணனிடம் சேர்ந்தன. சுவாமி தம் மாயையால் ஆக்கிய உருவங்களை ஒடுக்கிக் கொண்டார். (தொடரும்)



கையில் மத்தாப்பு, இதழில் சிரிப்பு

அன்று திருக் கார்த்திகை.

அந்த வருஷம் ரொம்ப மழை. கார்த்திகை தீபத்துக்காகவே மழை கொஞ்சம் நின்றது போலிருந்தது. அன்று பகலில் கூட அடைமழை கொட்டியது. பனி வேறு முன்னாலேயே விழ ஆரம்பித்து விட்டது. ஊரே குளிர்ந்து கிடந்தது. வீடு வாசல் உள்ளவர்களுக்கு மழையைப் பற்றியோ பனியைப் பற்றியோ என்ன கவலை? கோலாகலமாகத் தீபமேற்றித் திருக் கார்த்திகை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

எங்கு பார்த்தாலும் வரிசையாக விளக்குகள். வீடெல்லாம் திருவிளக்கு. தெருவெல்லாம் தீப ஒளி. சிறுவர் சிறுமியர் புத்தாடை அணிந்து மத்தாப்பும் வெடியும் கொளுத்திக் குதுகலப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தீபாவளிக்கு வாங்கிய வெடி வாணங்களில் கார்த்திகைக்கென்று ஒரு பகுதி எடுத்து வைத்து விடுவதுதான் வழக்கமாயிற்றே! அப்படி வைக்காதவர்களுக்கு வாணமும் வெடிகளும்தான் கடைகளில் விற்பனை செய்கிறார்களே.

ராணிதான் பாவம் !

பெயர்தான் ராணியே தவிர அவள் ரொம்ப ரொம்ப ஏழைப் பெண். அவள் வசிப்பது குடிசையில். விடாமல் பெய்த அடை மழையில் அந்தக் குடிசையும் சரிந்து விழுந்து விட்டது. அவள் அம்மாவும் குட்டித் தம்பியும் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்து வராந்தாவில் ஒண்டிக் கொண்டிருக்கிறார்கள் குளிரில் நடுங்கியபடி. காலையில் அம்மாவைத் தொட்ட ராணி திடுக்கிட்டாள். தாயின் உடல் நெருப்பாகக் கொதித்தது. ''என்னம்மா உனக்குக் காயலா?'' என்று கேட்டாள் ராணி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா?'' என்று இழுத்துப் போர்த்திக் கொண்ட அவள் அம்மாவுக்குப் பல் 'டிக் டிக்' என்று அடித்துக் கொள்ளுவது நன்றாகத் தெரிந்தது. இந்த மாதிரி அவள் அம்மாவுக்கு அடிக்கடி குளிர் ஜுரம் வந்துவிடும். அதற்கு ஒரு மருந்தும் அவளுக்குத் தெரியும். அதை வாங்க வேண்டுமானால் ஐம்பது பைசா வேண்டுமே? அந்தக் காசுக்கு அவள் எங்கே போவாள்? ராணியின் அப்பாவோ பெரிய குடிகாரன். குடித்துவிட்டு எங்கே விழுந்து கிடக்கிறாரோ இப்போது? என்றாவது அவர் வீட்டுக்குத் திரும்பி வந்தால் வீடு ரகளைப்படும். அவளுக்கு அப்பாவைக் கண்டாலே பயம். 'இப்போது அந்த வீடுமில்லை. குடிசைதான் உக்காந்துட்டுதே. இனிமே சர்க்காரிலே கீத்தும் மூங்கிலும் கொடுப்பாங்க.... அது எப்பவோ?' பெரிய மனுஷிபோல ராணியின் சிந்தனை இப்படியெல்லாம் ஓடியது.

முதல் நாள் பகல் கார்ப்பரேஷன் லாரியில் எல்லாருக்கும் உணவுப் பொட்டலம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அது காயகல்பம் என்பது அவர்கள் நினைப்பு. அதைச் சாப்பிட்டுப் பத்து நாட்கள் பசியில்லாமல் இருக்கலாம் என்பது அவர்கள் எண்ணமோ என்னவோ? அந்தப் பொட்டலத்தால் கால் வயிறு நிறைந்தது ராணிக்கு. அடுத்த நிமிஷமே பசி அதிகமாகியது. ஆனால் ராணி ரொம்பப் பொறுமைசாலி. பசியைத் தாங்கிக் கொண்டாள். பத்து வயதுப் பெண்ணுக்கு அப்படியொரு பொறுப்பு அதிசயமில்லையா ?


அம்மாவின் குளிர் ஜுரம்தான் ராணியின் நெஞ்சைத் திருகி எடுத்தது. 'எப்படியாவது எட்டணா சம்பாதித்தால் அம்மாவுக்கு அந்த மாத்திரையை வாங்கிக் கொடுக்கலாமே? என்று தவித்தாள். ஒரு யோசனை தோன்றியது, பட்டாசுக் கடைக்காரப் பங்காருவுக்கு அவளைத் தெரியும். ''ரொம்பக் கோபக்காரர். ஆனாலும் என்ன? அவரிடம் போய் ரெண்டு டஜன் மத்தாப்புக்களை வாங்கிக் கொண்டு

வீடுகள் உள்ள தெருவில் போய் விற்று வந்தால் ஏதாவது காசு தர மாட்டாரா? இன்று கார்த்திகை. வாணம் மத்தாப்பு வாங்குவாங்க. இப்படி இரண்டு மூன்று தடவை பல தெருக்களையும் சுற்றினால் மாத்திரை வாங்கவும் ஒரு பன்னுக்கும் டீக்கும் கூடப் பணம் சம்பாதித்துவிடலாமே.'' கற்பனைக் குதிரை மீதேறிப் பறக்கலானாள் ராணி.

அவள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பேரில் பங்காரு மூனு டஜன் மத்தாப்புப் பெட்டிகளைக் கொடுத்தார் அவளிடம். ''இந்தா பாரு, விக்காம திருப்பிக் கொணாந்தே என்ன செய்வேனோ எனக்கே தெரியாது...ஆமா!'' என்று எச்சரித்து அனுப்பினார். 'இம்மாம் பெரிய ஊரிலே மூனு டஜன் மத்தாப்பு விக்காமயா போவுது?' என்ற நம்பிக்கையில் ராணி ஆசை நடை போட்டாள். ஆனால் எத்தனை ஏமாற்றம்?

ராணி தெருத் தெருவாகச் சுற்றினாள். குழந்தைகள் கூடி நின்ற பக்கமெல்லாம் போய்க் கூவினாள், 'மத்தாப்பு மத்தாப்பு' என்று. ஆனால் அந்த ஏழைப் பெண்ணை யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவர்கள் அன்று மாலை தங்கள் வீடுகளில் தீபாலங்காரம் செய்யப் போகும் பரபரப்பில் போய்க் கொண்டிருந்தனரே ஒழிய ராணியையோ அவள் கூவி விற்ற மத்தாப்புவையோ யாருமே லட்சியம் செய்யவில்லை.

நடந்து நடந்து ராணிக்குக் கால்கள் துவண்டன. மத்தாப்பு என்று கூவிக் கூவி வாயெல்லாம் வலித்தது. முதல் நாள் பன்னிரண்டு மணிக்கு ஒரு கவளம் சாப்பிட்டது. பசி கண்ணை இருட்டியது. இரு நாளும் அம்மாவின் குளிர் காய்ச்சலைக் குணப்படுத்தும் மாத்திரை வாங்கக் காசு சேகரிக்கும் ஆவலில் இருட்டும் வரை அலைந்து கொண்டிருந்தாள் ராணி. தெருவெல்லாம் விளக்கு ஜகஜ்ஜோதியாக மினுக்கலாயின. பாவம் ராணியின் உள்ளத்தில் மட்டும் ஒரே இருள். ''ஒரு மத்தாப்



வாண்டுமாமா

புப் பெட்டிகூட விலை போகவில்லையே! அட, கடவுளே! திருப்பிக் கொண்டு போய்க் கொடுத்தால், பங்காரு என்ன செய்வாரோ?'' நினைக்கவே அவள் பிஞ்சு நெஞ்சம் நடுங்கியது. தளிர் உடல் தள்ளாடியது.

இரண்டு பெரிய வீடுகளுக்கு நடுவே ஒரு பூட்டிய வீடு, அவள் உள்ளத்தைப் போல் இருள் கப்பிக் கிடந்தது. ரணமாகக் கடுக்கும் கால்களுக்கு இதமாக அந்த வீட்டின் திண்ணையில் சம்மணமிட்டு உட்கார்ந்தாள். கால்களை மடக்கி, அழுத்தி அமர்ந்தது வலிக்கு இதமாகக் கூட இருந்தது. மடியில் மத்தாப்புப் பெட்டிகள் அவளைப் போல் அநாதரவாகக் கிடந்தன. அவற்றைத் தொடவே இப்போது அவள் விரல்கள் நடுங்கின. பங்காருவின் பயங்கர முகம்; பற்கள் ஒன்றோடொன்று கடகடவென்று அடித்துக் கொள்ளும் அம்மாவின் ஒட்டி உலர்ந்த முகம்.

இந்தக்கற்பனையிலேயே அவள் கைகள் அவளை அறியாமலேயே ஒரு மத்தாப்புப் பெட்டியைப் பிரித்து ஒரு குச்சியைக் கிழித்தன. பசுமையான ஒளி, அதன் நடுவே ஓர் அழகான காட்சியைக் கண்டாள் ராணி. சின்னஞ் சிறு வீடு. அவள் அம்மா கோடி உடுத்தி வரிசையாக அகல் விளக்குகளைத் திண்ணையில் வைக்கிறாள். அதோ, ராணியும் அருகே கையில் மத்தாப்புவுடன்....ஆகா....! மத்தாப்பின் ஒளி பட்டென்று அணைந்தது. மறுபடியும் இருள். அவள் கையில் எரிந்து கருகிய மத்தாப்புக் குச்சி. தான் அந்த ஒளிக்குள் கண்டது நிஜமானால்.....? எத்தனை இனிமையான காட்சி ? இந்த மத்தாப்புக்கள் மந்திர சக்தி பெற்றவையோ ? அற்புதமான காட்சிகளாகத் தெரிகிறதே !

தானாகவே அவள் கை மற்றொரு மத்தாப்புவைக் கொளுத்தியது. 'அதே வீடு. வீட்டின் கூடம். வரிசையாக யார் உட்கார்ந்திருக்கிறார்கள்? அவள்அம்மா அவள் தம்பி, அவளும்தான்! முன்னால் பெரிய வாழை இலை. அதில்தான் எத்தனைவிதமான பட்சணங்கள், பணியாரங்கள்? ஆகா ! என்ன சுவை ! அதோ, இலையின் அந்தக் கோடியில் அது லட்டுவா?' கைநீட்டி எடுக்கப் போகிறாள் ராணி. மத்தாப்பு மருந்து தீர்ந்து போகிறது. மறுபடியும் இருள். ராணிக்கு ஒரே ஏமாற்றம். அழுகை நெஞ்சை அடைத்தது. வானத்தைப் பார்த்தாள். கருநீல வானத்திலே அது என்ன, அப்படிப் பாய்ந்து போய் விழுகிறதே, நட்சத்திரமா? இல்லை, யாராவது அவுட் வாணம் விட்டிருப்பார்களா ? 'நட்சத்திரம்தான். யாரோ ஒரு நல்லவர் இறந்து விட்டார்! அதுதான் அந்த நட்சத்திரம் விழுந்திருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் ராணி. அப்போது அவளுக்கு அவள் அருமைப் பாட்டியின் நினைவு வந்தது. பாட்டி இருந்த வரை அவள் இப்படிக் கஷ்டப்பட்டதே இல்லை. ராணியிடம் பாட்டிக்கு உயிர் ! 'பாட்டி, பாட்டி! நீ இருந்தால் நான் இப்படிப் பசியோடு.....' என்று குமுறும் உள்ளத்துடன் ராணி இன்னொரு மத்தாப்புவைக் கொளுத்தினாள். என்ன ஆச்சரியம் ! அதன் ஒளியில் இப்போது அவள் அழைத்த பாட்டியே வந்து நின்றாள். சிரித்த முகம். ஆனால் பாட்டி இப்போது ரொம்ப இளமையாக அழகாக விளங்கினாள். ராணிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ''பாட்டி.... பாட்டி, நீ என்னை விட்டுப் போயிடாதே. மத்தாப்பு அணைந்ததும் நீ மறைந்து விடாதே ! எனக்கு ஒரே குளிர், பசி'' என்று அலறியபடியே தன் அருமைப் பாட்டி மறைந்துவிடக் கூடாதே என்று பரபரப்புடன் மத்தாப்புப் பெட்டியிலிருந்து குச்சிகளை இரண்டு மூன்றாகக் கிழித்து ஏற்றினாள். ஒரே ஒளி வெள்ளம். அதன் நடுவே நடந்து வந்த அவள் பாட்டி ராணியின் கையைப் பற்றித் தூக்கிக் கொண்டாள். தன் உடலோடு சேர்த்து அணைத்து முத்தமிட்டாள். பாட்டியோடு ராணி மேலே மேலே போய்க் கொண்டிருந்தாள். மத்தாப்பு அணையவே இல்லை. ஒரே வெளிச்சம். இப்போது அவளுக்குக் குளிரவில்லை. பசிக்கவில்லை. சொர்க்கம் என்கிறார்களே, அது இதுதானோ ? அங்குதான் இப்படி அணையாது ஒளி வீசுமாம். பாட்டி சொல்லி இருக்கிறாளே.

இரவு முழுதும் விடாது மழை பெய்தது. பொழுது விடிந்தபோது பூட்டிக் கிடந்த வீட்டின் திண்ணையில் உட்கார்ந்தபடியே இருந்தாள் ராணி. அவள் மடியில் இரண்டு பிரிக்காத மத்தாப்புக் கட்டுகள். ஒரு கட்டுப் பிரிக்கப்பட்டுச் சிதறிக் கிடந்தது. ராணியின் கை எரிந்த நான்கு மத்தாப்புக்களைச் சேர்ந்தாற் போலப் பற்றிக் கொண்டிருந்தது.

எழுந்திருக்காத தூக்கத்தில் ஆழ்ந்திருந்த அவளைப் பார்த்த ஊரார் பேசிக் கொண்டார்கள் : ''பாவம், மத்தாப்பு விற்பவளானாலும் ஆசை இருக்காதா ? கொளுத்திப் பார்த்திருக்கிறாள்.'' ''தாங்க முடியாத குளிரில்லையா? கதகதப்புக்கு மத்தாப்பு கொளுத்தி இருக்கிறாள் போலும்.''—இப்படிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டாலும் — அந்தப் பெண்ணின் இதழில் தவழ்ந்த அந்தப் புன்னகை, ஆனந்தம், அமைதி, எதனால் என்று மட்டும் யாருக்கும் தெரியவில்லை.



சிற்பி செதுக்கிய சிலை!

கிருஷ்ணதேவராயர் சபை கூடியிருந்தது, ஒரு விசித்திரமான வழக்குக்குத் தீர்ப்புக் கூறுவதற்காக. வெங்கண்ணா என்ற ஒரு சிற்பி. அவனிடம் திம்மண்ணா என்பவர் ஓர் அபூர்வமான மரத்தைக் கொடுத்து அதில் ஒரு சிலை வடித்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். சிலை செய்வதற்குக் கூலி என்ன தெரியுமா? அதுவும் விசித்திர மானது. சிலை உருவாகும்போது அந்த மரத்திலிருந்து கழிவாக விழும் மரத் தூளின் அளவுக்குத் தங்கம் தருவதாகத் திம்மண்ணா ஒப்புக் கொண்டிருந்தார். வெங்கண்ணாவும் அதற்குச் சம்மதப்பட்டு ஒரு சரஸ்வதி சிலையை அந்த மரத்தில் செதுக்கி உருவாக்கி விட்டார். ஆனால் அந்த நிலையில் தான் ஒரு தொல்லை ஏற்பட்டது. திம்மண்ணா தாம் வாக்களித்தபடி பொருள் தரத் தயாராக இருக்கிறார். ஆனால் வெங்கண்ணாவினால் அவர் நிபந்தனையை நிறைவேற்ற முடியவில்லை. ஏன்? வெங்கண்ணாவின் மனைவி சிலை செதுக்கி விழுந்த மரத் தூளை அடுப்பெரித்து விட்டாள். அந்தத் தூள் இருந்தால் அல்லவா அதன் அளவுக்குத் திம்மண்ணா பொன் தர முடியும்? 'நிபந்தனைப்படி மரத் தூளைக் கொண்டு வா. அளவில்லாமல் நான் எப்படி எவ்வளவு பொன் உனக்குத் தர முடியும்?' என்கிறார் திம்மண்ணா. வெங்கண்ணா விழிக்கிறான். ஆனால் தன் உழைப்புக்கு ஊதியம் வேண்டும் என்று வாதாடுகிறான். இது தான் வழக்கு. விசித்திரமானதுதானே? கிருஷ்ணதேவராயர் தம் அருகிலிருந்த தெனாலிராமனைப் பார்த்தார். மன்னரின் குறிப்பறிந்த தெனாலிராமன் ''திம்மண்ணா, உங்கள் நிபந்தனைப்படி நீங்கள் பொருள் கொடுத்தால் போதும். வெங்கண்ணாவிடம் கொடுத்த மரத்தின் அளவு என்ன தெரியுமா?'' என்று கேட்டான் ராமன்.

''தெரியாமல் என்ன? மூன்றடி உயரம், ஓரடி அகலம், ஓரடி கனமுள்ள மரம் அது'' என்றார் திம்மண்ணா.

''நாளைக்கு வாருங்கள். நீங்கள் தர வேண்டிய பொன்னின் அளவைச் சொல்கிறேன்'' என்றான். அதன்படியே மறு நாள் எல்லாரும் வியக்கும்படி வெங்கண்ணா வெட்டித் தள்ளிய மரத் தூளின் அளவைக் குறிப்பிட்டு அந்த அளவுக்குப் பொன்னையும் திம்மண்ணா முகம் சுளிக்காமல் சந்தோஷமாகத் தரும்படி செய்தான் ராமன். அப்படித் தெனாலிராமன் செய்தது என்ன? சிற்பி செதுக்கி எடுத்த மரத்தின் அளவை எப்படிக் கண்டு பிடித்தான் தெனாலிராமன்? முயன்று பாருங்கள். முடியாவிட்டால் மட்டுமே இந்தப் பக்கத்தைத் தலைகீழாகத் திருப்பிப் பார்க்கவும்!

சுண்டு குண்டு சீமாத் தாத்தா!

சாமா

"பாட்டி வந்தாச்சு தீபாவளிக்கு!" என்று சுண்டுவும் குண்டுவும் கொம்மாளம் போட்டார்கள். பாட்டி வந்ததற்காகவா இவ்வளவு கொம்மாளம்? இல்லே. அவள் கையில் இருந்த ஒரு பெரிய பட்டாஸ் பெட்டியும் பக்ஷண மூட்டையும்தான் சுண்டு குண்டுவின் கொம்மாளத்துக்குக் காரணம்.


வீடு முழுதும் வாணப் புகை. சீமாத் தாத்தாவுக்குத்தான் வெடிகளையும், வாணங்களையும் கொளுத்துவதில் ஏக ஆனந்தம். "தாத்தா! எல்லாவற்றையும் நீங்களே கொளுத்துகிறீர்களே, நாங்களும் கொளுத்த வேண்டாமா?" என்று சுண்டுவும் குண்டுவும் கெஞ்சும்போது தாத்தா அவர்களிடம் கொடுத்துக் கொளுத்தச் சொல்லுவார். அவர்கள் கொளுத்தும் சமயத்தில் "அப்படிக் கொளுத்தாதிங்கடா. முகத்தில் வெடிக்கும்...!" என்று அதை அவர்களிடமிருந்து வாங்கித் தாமே கொளுத்திச் சந்தோஷப்படுவார்.

'இதோ பார் சட்டி வாணம் 'புஸ்' என்று உயரக் கிளம்பிப் 'பூப்பூ'வாக விழப் போகிறது' என்று சொன்னவர் தம் தைரியத்தைக் காட்ட அந்தச் சட்டி வாணத்தைக் கையிலே பிடித்தபடியே கொளுத்தினார். அது 'டுமீல்' என்று கையிலேயே வெடித்து விட்டது.


"ஐயோ! ஆ.... எரிச்சல் தாங்கவில்லையே!" என்று தாத்தா கதறலானார். ஏதேதோ மருந்தெல்லாம் போடப்பட்டது. பாட்டி தன் இடது கையினால் மருந்திட்ட அவரது கைக்கு விசிறிய படியே இருந்தாள். சுண்டுவும் குண்டுவும் பரிவுடன் தாத்தாவிடம் வந்து, "எங்களை ஒரு வாணம் கூடக் கொளுத்த விடாமல் நீங்களே கொளுத்தினீர்கள். வயசானவாளெல்லாம் இப்படி வாணங்கள் விட ஆசைப்பட்டால் எங்களுக்கு எப்பத்தான் 'சான்ஸ்' வரும்?" என்றார்கள். தாத்தாவுக்கு வந்ததே கோபம்! "நான் சின்னவனாக இருந்தபோது என் அப்பாதான் எல்லா வெடிகளையும் வாணங்களையும் கொளுத்தி ஆனந்தப்பட்டார். அப்பொழுதெல்லாம் நான் ஏங்கினேன். இப்பத்தான் எனக்கு 'சான்ஸ்' கிடைத்திருக்கிறது. உங்களுக்கும் என் மாதிரி வயது ஆனால் அந்தச் சான்ஸ் கட்டாயம் வரும்!" என்று சொல்லிக் கொண்டே எரியும் தம் கையை ஊதிக் கொண்டார்.

சாப்பிட அழைத்தாள் பாட்டி. சுண்டு தயங்கினான். அவன் வைத்த தரைச் சக்கரம். அவன் கையில் பீச்சி வலது கை விரல்களைக் கறுப்பாக்கி விட்டது. தட்டின்முன் உட்கார்ந்ததும் "சாதத்தைப் பிசைவது தானே?" என்று பாட்டி சொன்னாள். சுண்டு விழித்தான். உண்மையைச் சொன்னால் 'வாணங்களைப் பார்த்துக் கொளுத்தக் கூடாதா?' என்று பாட்டி சீறப் போகிறாளே என்று "பாட்டி, இன்றைக்கு மட்டும் நீ பிசைந்து போட்டு விடேன். உன் கையால் பிசைந்து சாப்பிட்டு ரொம்ப நாளாயிற்று!" என்றான் சுண்டு.

பாட்டியின் முகத்தில் அசடு வழிந்தது. ஏன்? தாத்தாவுக்கு இடது கையால் விசிறிக் கொண்டிருந்தாளே, காரணம் என்ன? விடியற்காலம் கொல்லைப்பக்கம் 'வெடி கொளுத்துவது சாஸ்திரம்' என்று சொல்லி அவளும் ஒரு வெடியைக் கொளுத்தினாள். அது அவள் வலது கையில் பீச்சி யடித்துவிட்டது! இதைத் தெரிந்து கொண்ட சுண்டுவும் குண்டுவும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். □



தேச தேசக் கதைகள் :
ஹங்கேரி



கறுப்பு இளவரசி

" கிருஷ்ணவேணி "

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னுலே ஹங்கேரி நாட்டில் ஓர் அரசர் இருந்தார். அவருக்கு ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுக ஒரே ஒரு மகன். இளவரசன் ரொம்ப ரொம்ப அழகு. தன் மகனைப்பற்றி அரசருக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி; மறு பக்கம் துக்கம். துக்கம் ஏன் தெரியுமா? இளவரசன் பிறந்தபோது ஒருகெட்ட தேவதை குழந்தைக்கு ஒரு சாபம் கொடுத்து விட்டது. இளவரசன் தன் கால்களைத் தரையில் வைத்தால் உடனே அவன் அத்தேவதையின் ஆளுகைக்குட்பட்ட அடிமையாகிவிட வேண்டும். இதுவே அந்தப் பொல்லாத தேவதை கொடுத்திருந்த சாபம்.


இளவரசன் வளர்ந்து பெரியவனுனன். நல்ல திடகாத்திரமான சரீரம். கம்பீரமான உருவம். ஆனால் அவன் தன் வயதுக் கொத்தவர்களுடன் சேர்ந்து எங்கும் விளையாடப் போவதில்லை. சின்னக் குழந்தையாக இருந்தபோது அவன் பாதம் பூமியில் படாமலிருக்க வேலைக்காரர்கள் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். நடக்கும் வயதானதும் அவனுக்காக ஒரு நாற்காலி செய்தார் அரசர். அதற்கு நாலு சக்கரம் உண்டு. அதில் உட்கார்ந்தபடி அரண்மனை முழுதும் இளவரசன் தானே எங்கு வேண்டுமானுலும் போய் வருவான். ஆனுல் கால்களை மட்டும் தரையில் வைக்கமாட்டான். தப்பித் தவறி அவன் கால்களைக் கீழே ஊன்றிவிடப் போகிருனே என்று எப்போதும் அவன் அருகே காவலாளிகள் இருந்தனர். வளரும் இளவரசனுக்கு இது எத்தனை பெரிய தொல்லை? ஆனுல் இளவரசன் இத்தனையையும் இன்முகத்துடன் சகித்துக் கொண்டான். இந்தப் பொறுமை எல்லாரையும் கவர்ந்தது.

இளவரசன் வாலிப வயதடைந்ததும் அரசர் அவனுக்கு ஓர் அழகான கம்பீரமான வெள்ளைக் குதிரையைப் பரிசளித்தார். அவனைப் போலவே அந்தக் குதிரையும் ரொம்ப அழகானது. இளவரசன் குதிரை மீதேறிக் காடு மலை நாடு நகரமெல்லாம் சுற்றினுன். ஆனுல் மறந்து போயும்கூடக் காலை மட்டும் தரையில் வைக்கவில்லை. எப்போதும் குதிரை மீதே அவனைப் பார்ப்பார்கள் எல்லோரும். ஆகவே அவனைச் செல்லமாகக் 'குதிரை இளவரசன்' என்று கூப்பிடலானுர்கள். நாளாக ஆக அரசரும் கெட்ட தேவதையின் சாபத்தை மறந்து மகிழ்ச்சியுடன் இருக்கலானுர்.

ஒரு நாள் இளவரசன் தன் சகாக்களுடன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றுன் — குதிரை மீதுதான். அது அடர்ந்த காடு. ஓர் ஒற்றையடிப் பாதை ஓர் ஏரிக்கரைக்கு அழைத்துச் சென்றது. அந்த ஏரியைச் சூழ்ந்து நெடிதுயர்ந்த மரங்கள் இருந்தன. அதன் கிளைகள் வளைந்து கவிழ்ந்து ஏரியில் ஒருவித இருளை உண்டாக்கிக் கொண்டிருந்தன. ஏரியின் நடுவிலே ஒரு பெரிய மாளிகை இருந்தது. வெள்ளை வெளேர் என்று பால் போலப் பல மாடிகளைக் கொண்டதாகக் காணப்பட்டது அது. இளவரசனும் நண்பர்களும் மாளிகையின் அழகில் சொக்கிப் போனுர்கள். ஏரியைக் கடந்து அந்த மாளிகைக்குச் செல்ல நினைத்தார்கள். அப்போதுதான் அந்த துரதிர்ஷ்ட சம்பவம் நிகழ்ந்தது.

குதிரைகளின் குளம்பொலி கேட்ட முயல் ஒன்று பாதையின் பொந்திலிருந்து பயந்து வெளிப்பட்டு இளவரசனின் குதிரை முன்னே குறுக்காகப் பாய்ந்து ஓடியது. திடீரென்று குறுக்கே தாவி ஓடிய முயலைக் கண்டு குதிரை மிரண்டு தன் மீதிருந்த இளவரசனைக் கீழே தள்ளிவிட்டு ஓட்டமெடுத்தது. இளவரசன் கீழே விழுந்தால் என்ன ஆகும்? அவன் கால் பூமி மேல் படத்தானே செய்யும்? பட்டது. அடுத்த விநாடி பனிப் படலம் போல் ஒரு மேகம் வந்து இளவரசனை மூடிக் கொண்டது. இளவரசனின் தோழர்கள் பீதியுடனும் வேதனையோடும் பார்த்துக் கொண்டு சிலையாகி நின்றுர்கள். சற்றைக்கெல்லாம் பனிப் படலம் மறைந்தது. ஆனுல் அங்கு இளவரசனைக் காணவில்லை.

நடந்ததை அறிந்த அரசன் கெட்ட தேவதையின் சாபம் பலித்துவிட்டதை



எண்ணி வேதனையடைந்தார். தம் ஒரே மகனை இழந்த அவருக்கு எதிலுமே வெறுப்புண்டாயிற்று. ஆனாலும் நல்லவர்களுடைய ஆசிகள் தம் மகனை எப்படியும் காப்பாற்றும் என்ற ஒரு சிறு நம்பிக்கை மட்டும் அவருக்கு இருந்தது.

பனிப் படலத்தினால் கவரப்பட்ட இளவரசனின் நிலை என்ன? தன்னை வெண் புகை சூழ்ந்து கொண்டதும் அவனுக்கு நினைவு தப்பிவிட்டது. மறுபடியும் அவன் கண் விழித்தபோது தான் ஒரு புதிய சூழ்நிலையில் இருப்பதை உணர்ந்தான். அவனது இதயத் துடிப்பையே கேட்குமளவுக்கு அத்தனை அமைதியாக இருந்தது அந்த இடம். எழுந்து சுற்று




முற்றும் பார்த்தான். அந்த ஏரியில் கண்ட மாளிகையில் தான் இருப்பதை உணர்ந்தான். ஒற்றையடிப் பாதையிலிருந்து மாளிகையைப் பார்த்ததற்கும் இப்போது மாளிகையிலிருந்து ஏரியையும் அதைச் சூழ்ந்துள்ள கானகத்தையும் காண்பதற்கும் தான் எத்தனை வித்தியாசம்?

வட்ட வடிவமாக இருந்தது ஏரி. அதைச் சூழ்ந்து நின்ற மலைகளும் காடுகளும் இருள் மண்டிக் கிடந்தன. எங்கும் அசைவே இல்லை. ஓசையே கிடையாது. ஒரு பறவையைக்கூடக் காணோம். ஏரியைக் கடக்கவோ, கடந்து அதைச் சூழ்ந்துள்ள மலை மீது ஏறவோ யாராலுமாகாது. அந்த வெள்ளை மாளிகையிலிருந்து ஏரிக் கரைக்குப் போகப் புகைப்படலமாக ஒரு பாலம் இருந்தது. 'அது தேவதையின் மாய சக்தியால் ஆக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதன்மீது நடக்கச் சாதாரண மனிதர்களால் முடியுமோ? அப்பா அடிக்கடி கூறிய கெட்ட தேவதை வசிக்கும் மாளிகை இதுதானோ?' என்று இப்படியெல்லாம் இளவரசன் எண்ணமிட்டபடி • சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் போது அவன் முன்னால் அந்தப் பொல்லாத தேவதை தோன்றியது. "இந்தச் சந்தர்ப்பத்துக்காகத்தான் நான் இத்தனை வருஷங்களாகக் காத்திருந்தேன்" என்றது தேவதை. "இனி நீ என்னுடைய அடிமை. என் ஆதிக்கத்துக்குட்பட்டவன் நீ. நான் சொல்வதை எல்லாம் நீ கேட்க வேண்டும். மீறினால் என்னுடைய மிகக் கடுமையான தண்டனையை, அது எப்படிப்பட்டதென்று உன்னால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது."

இளவரசன் பதிலேதும் கூறவில்லை. தேவதையினுடைய முகத்தின் கொடுமையையே பார்த்துக் கொண்டிருந்தவன் தனது தோள்களை மட்டும் உயர்த்திக் கைகளை விரித்துத் தன் இயலாமையை வெளிப்படுத்தினான்.

" இதோ இந்தக் கோடரியை வாங்கிக் கொள். இது கண்ணாடியால்



ஆன கோடரி. இதனால் ஏரிக் கரையில் உள்ள மரங்களை வெட்டி வீழ்த்தி அழிக்க வேண்டும். நான் ஓர் இடத்தைக் குறிப்பிடுகிறேன். அங்கிருந்து நீ வெட்ட ஆரம்பிக்கலாம். கானகத்திலே ஒரு கறுப்பு நிறமுடைய பெண்ணை நீ சந்திக்க நேரலாம். அவள் உன்னோடு பேச முற்பட்டாலும் நீ அவளோடு பேசக் கூடாது. தெரிந்ததா? இந்த என் எச்சரிக்கையை மறந்துவிடாதே'' என்று கூறிக் கையை உயர்த்திப் புகைப் படலத்தைச் சுட்டிக் காட்டியது தேவதை. இளவரசன் கண்ணாடிக் கோடரியைப் பெற்றுக் கொண்டு புகை மூட்டப் பாலத்தின் மீதாக நடக்கலானான். 'என்ன ஆச்சரியம்! பார்க்கப் பஞ்சு போலிருந்தாலும் பாலம் நல்ல உறுதியானதுதான். தேவதையின் மாய சக்தி இதுதானோ?'

கானகத்தை அடைந்த இளவரசன் கண்ணாடிக் கோடரியால் ஒரு மரத்தில் ஓங்கி ஒரு வெட்டுப் போட்டான். என்ன ஆகி இருக்கும் சொல்லுங்கள்? கோடரி சுக்குத் தூளாக ஆயிரம் பதினாயிரம் துண்டுகளாகச் சிதறியது. திடுக்கிட்டுத் திகைத்துப் போன இளவரசன் நடுங்கிப் போய்க் காட்டுக்குள் ஓடலானான், எப்படியாவது அந்தத் தேவதையின் பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணத்துடன். ஆனால் அது அத்தனை சுலபமாக இல்லை. கானகத்தில் வழியே தெரியவில்லை. சுற்றிச் சுற்றி வந்து களைத்துப் போனவன் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிப் போனான்.

திடீரென்று ஏதோ உலுக்கி எழுப்புவது போலிருக்கவே, திடுக்கிட்டுக் கண் விழித்தவன் தன் முகத்துக்கு நேரே குனிந்தபடி ஒரு பெண் தன்னையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவள் முகத்திலும் உடலிலும் இளமை கொழித்தது. ஆனால் அவள் உடல் நிறம் அவள் அணிந்திருந்த உடையின் நிறம் எல்லாமே ஒரே கருங்காவி வண்ணமாக இருந்தன. 'அந்தத் தேவதை கூறிய கறுப்புப் பெண் இவள்தானோ? சஞ்சலமற்ற சப்தமற்ற மௌனமான கானகத்தின் காவலாளியோ இவள்?' என்று இப்படியெல்லாம் எண்ணமிடலானான் இளவரசன். அந்தக் கறுப்புப் பெண்ணின் விழிகளில் பரிவு வழிந்தது. அவள் பேசினாள். அவள் குரல்தான் என்ன இனிமையாக இருந்தது? ''நாம் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்போம். நானும் உன்னைப்போல் அந்தக் கெட்ட தேவதையின் சக்திக்கு அடிமைப்பட்டுக் கிடப்பவள்தான். இந்தக் கோலத்தில் இந்தக் கானகத்தில் நான் அலைந்து கொண்டிருக்கும்படி செய்திருக்கிறது அந்தத் தேவதை. இக்கானகத்தின் மறு பக்கத்திலுள்ள நதிக்கரைக்கு என்னை எந்த ஒரு வீரமிக்க வாலிபன் காப்பாற்றிக் கொண்டு போய்க் கரை சேர்க்கிறானோ, அப்போதே எனக்கு விடுதலை கிடைத்து விடும். கெட்ட தேவதையின் சக்தியும் விடுபட்டு விடும்'' என்றாள் அந்தப் பெண்.

இளவரசன் தன் கதையைக் கூறினான். அவள் பரிவோடு கண்களில்

நீர்த் திரையிட அறைதக் கேட்டாள். ''எத்தனை கொடுமை? நான் உங்கள் விடுதலைக்காகவும் உழைப்பேன். அந்தத் தேவதை பணிக்கும் காரியங்களில் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன்'' என்றாள் அந்தப் பெண். இவள் இதைக் கூறிக் கொண்டிருக்கும்போதே இளவரசனுக்குத் தூக்கம் கண்களைச் செருகலாயிற்று. மறுபடியும் அவன் கண் விழித்தபோது கண்ணாடிக் கோடரி முழுமையாக அருகில் இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான். சுற்றிலுமிருந்த ஏராளமான மரங்களும் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தன.

வெண் மேகத்தினால் ஆன பாலத்தின் வழியே வெள்ளை மாளிகைக்குப் போனான் இளவரசன். உடையாத கோடரியையும் மகிழ்ச்சியோடுகூடிய இளவரசனை



யும் கண்ட துர்த் தேவதைக்கு ஆத்திரமான ஆத்திரம்! தூரத்தே மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டிருப்பதைக் கண்டதும் கோபமான கோபம்! மறுநாள் இன்னும் கடுமையான பணியைக் கொடுத்தது தேவதை. அதே கண்ணாடிக் கோடரியைக் கையில் கொடுத்து ''நேற்று வெட்டிப் போட்ட மரங்களையெல்லாம் அடுப்பெரிக்க ஏற்றபடி துண்டு போட்டு வா'' என்றது.

அன்றைக்கும் அந்தக் கறுப்புப் பெண்ணைச் சந்தித்தான் இளவரசன். அவளோடு பேசிக் கொண்டிருக்கும் போதே தூங்கியும் போனான். கண் விழித்து எழுந்த போது தன்னைச் சுற்றி மரக் கட்டைகளைத் துண்டாடிக் கட்டுக்களாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியந்து போனான். முதல் நாளைவிட முன்னதாகவே அரண்மனை திரும்பிய இளவரசனைக் கண்ட தேவதைக்கு வெறுப்பான வெறுப்பு. வேலையைக் கச்சிதமாக முடித்தும்விட்டானே! மூன்றாவது நாள் துர்த் தேவதை இளவரசனிடம் ''காட்டை அழித்த இடத்தில் ஓர் அற்புதமான மாளிகை கட்ட வேண்டும். எதனால் தெரியுமா? தங்கக் கற்களினால். வெள்ளி தான் சுண்ணாம்புக் கலவை. மேல் பூச்சுக்கு நவரத்தினக் கற்கள். புரிந்ததா? இந்த அற்புத மாளிகையை அரை நாளில் கட்டி முடிக்க வேண்டும். இல்லாவிடில்....'' அந்தத் தேவதையின் முகம் போன போக்கின் கோரத்தைக் காணச் சகிக்காமல் இளவரசன் வெண்பனிப் புகைப்படலத்தின் வழியே கானகத்தை அடைந்தான். அந்த அதிசய மாளிகையை எழுப்புவதைப் பற்றி அவன் கவலைப்படவே இல்லை. அந்தக் கானகத்துக் கட்டழகி கறுப்புப் பெண்ணிடம் அவனுக்கு அப்படியொரு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. ''எதையும் முடிக்கும் ஆற்றல் கொண்ட அற்புதப் பெண்ணாக இருக்கிறாளே அவள்! எனக்காக, என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாள் அந்தப் பெண்'' என்று வேகமாக நடக்கலானான்.

ஆனால் இந்தத் தடவை அந்தப் பொல்லாத தேவதை தன்னைப் பின் தொடர்ந்து வருவதை அவன் கவனிக்கவில்லை. தன் கட்டளையைப் புறக்கணித்து அவன் கறுப்புப் பெண்ணுடன் நட்புக் கொண்டிருப்பதைக் கண்டது தேவதை. தன்னுடைய பிடியிலிருந்து விடுபட, இருவரும் சதி செய்வதைப் புரிந்து கொண்ட தேவதைக்குக் கோபமும் ஆத்திரமும் எரிமலையாக வெடித்தன. 'வீல்' என்று கத்தியது தேவதை. அந்தக் கூவலில் சுற்றிலுமிருந்த மலைகள் கிடுகிடுத்தன.

துர்த் தேவதையின் கோப கர்ஜனையினால் திடுக்கிட்டுத் திரும்பினான் இளவரசன். தேவதையின் ஆடைகளும் தலைமயிரும் நெருப்பு ஜ்வாலையாகப் பாலத்தில் ஓடி வந்து கொண்டிருந்தன இளவரசனை நோக்கி. இளவரசனுக்கு என்ன செய்வது, எப்படி அதனிடமிருந்து தப்பிப்பது என்று தெரியவில்லை. மலைத்துப் போய் நின்றான்.

ஆனால் இவனுக்காகக் காத்திருந்த கறுப்புப் பெண் இந்தக் காட்சியைக் கண்டதும் இளவரசனிடம் பயப்பட வேண்டாம் என்று சைகை மூலம் கூறிக் கீழே கிடந்த ஒரு பாறையை எடுத்துத் தேவதை வரும் திசையில் வீசினாள். என்ன ஆச்சரியம்! அடுத்த விநாடி ஒரு பெரிய புகை மண்டலம் கிளம்பியது. அதன் நடுவே தேவதை கேட்ட தங்க மாளிகை மளமளவென்று உருவாகியது. அதே வேளையில் கறுப்புப் பெண் இளவரசனின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு, ''சீக்கிரம்! சீக்கிரம்! விநாடியும் தாமதிக்காதீர்கள்!'' என்று கூறியபடியே கானகத்தினுள் ஓடலானாள்.

துர்த் தேவதையோ கறுப்புப் பெண்ணினால் எழுப்பப்பட்ட மிகப் பெரிய தங்க மாளிகையினுள் சிக்கிக் கொண்டது. அதன் பல்வேறு அறைகளின் வழியே புகுந்து புகுந்து வெளியே வர அதற்கு வெகுநேரம் ஆயிற்று.

இளவரசனும் கறுப்புப் பெண்ணும் நிற்காமல் ஓடினார்கள். மரங்களிடையே புகுந்து புகுந்து மூச்சு வாங்க ஓடிக் கொண்டேயிருந்தார்கள். கடைசியாக அந்த இருண்ட கானகத்திலிருந்து சூரிய வெளிச்சத்துக்கு வந்தபோது அவர்கள் முன்னே ஓர் ஆறு சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் கூறிய ஆறு அதுதான். ஆழமான ஆழம், வேகமான வேகம்!

அந்த ஆற்றின் மறு கரைக்குப் போய் விட்டால் போதும். துர்த் தேவதையின் பிடியிலிருந்து விடுபட்டு விடலாம். கறுப்புப் பெண் தாமதிக்கவில்லை. இளவரசனையும் பிடித்துக் கொண்டு ஆற்று வெள்ளத்தில் தொபுகடீரென்று குதித்தாள். எதிர்க்கரையை நோக்கி எதிர் நீச்சல் போடலானார்கள் இருவரும்.

இவர்கள் ஆற்றில் குதித்த அதே நேரத்தில் துர்த் தேவதை யாளிகள் பூட்டிய தனது ரதத்தில் ஏறி ஆகாயத்திலே பறந்து வந்தது. தன் ஆளுகையிலிருந்து அவ்விருவரும் தப்பிவிடுவதற்குள் பிடித்துவிட வேண்டும் என்ற வெறியில் தேவதை ஆற்று நீரில் தன் ரதத்தோடு பாய்ந்தது. ஆனால் கெட்ட தேவதைக்கு முடிவு காலம். தேரும் யாளிகளும் ஆற்றில் மூழ்கின. சீறிப் பாயும் ஆற்று வெள்ளம் துர்த் தேவதையை ஒரு சுழலில் இழுத்துப் போய் மூழ்கிச் சாகடித்தது.

இளவரசனும் கறுப்புப் பெண்ணும் நீந்தி ஆற்றின் மறு கரையை அடைந்தார்கள். முதலில் கரை ஏறிய இளவரசன் தன் தோழிக்குக் கை நீட்டினான் கரை சேர்க்க. நீரிலிருந்து வெளிவந்தவளைக் கண்ட இளவரசனுக்கு வியப்பான வியப்பு. திகைப்பான திகைப்பு! அவள்தான் என்ன அழகு? அப்பப்பா! அத்தனை அழகான சிங்காரியை அவன் கண்டதே இல்லை. துர்த் தேவதை இறந்ததும் கறுப்புப் பெண் மீதிருந்த அதன் சக்தியும் ஒழியவே, அவள் தன் உண்மை உருவை அடைந்து விட்டாள். ஆற்றின் எதிர்க் கரையிலிருந்த கருங் கானகத்தையோ மலைகளையோ கூடக் காணவில்லை இப்போது. ஏரியோ, மாளிகையோ ஏதும் இல்லை. பரந்து விரிந்து கிடந்தது பச்சைப் பசும் புல் வெளி. இளவரசன் அழகியை இழுத்துக் கொண்டு ஓடினான் தன் நாட்டுக்கு. அவனை இரு கைகளையும் நீட்டி ஆவலோடு வரவேற்று அணைத்துக் கொண்டார் அரசர். இளவரசன் அந்தக் கறுப்பு அழகியை — இல்லை இல்லை. இப்போதுதான் அவள் தங்கச் சிலையாயிற்றே — மணந்து கொண்டு நீண்ட நெடுங்காலம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான்.




"என்ன பெரியவரே, அங்கே என்ன பண்றீங்க ?"



"ஆமாம் பண்றேன், பானையும் சட்டியும்..."

புகைப்படங்கள் : வே.


16
ரஹீமின் அருகில் வந்தாள் அந்தப் பெண். ரஹீம் எழுந்து உட்கார்ந்தான். அவள் தன் துப்பாக்கி முனையால் பாக் வீரர்களிடம் பேசினாள்......
கைகளை உயர்த்தியபடி பின்னுக்குப் போங்கள். ஏதாவது சூழ்ச்சி செய்ய எண்ணினால் குண்டுகள் இதயத்தைத் துளைத்து வெளியே வரும்.
ஆனால் அபாயம்
நாலா பக்கமிரு
தும் சூழலாமிரு
அந்தப் பிரதேச
தை இருளில் மூ
கடித்தால்தான்
அவர்கள் தப்ப-
லாம்.
அவள் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய குண்டுகள் விளக்குகளைத் தூளாக்கி ஒளியை ஓட்டின.
ஓ... இந்தப் பக்
மாக... முள்வேலிக்கு
மறுபக்கம் போய் விட்
டால் போதும்.
என்னை ஓடச் சொல்லி விட்டு நீ....
இரு. துரத்தி வரும் அவர்களைத் தடுக்காவிடில் நாம் சுலபமாகத் தப்ப முடியாதே. இந்தக் கேட்டை...
பிணைத்திருந்த கம்பிகளை அவளுடைய குறி தவறாத குண்டுகள் சிதற அடிக்க, ஓடி வரும் பாக் வீரர் மீது ஓங்கி உயர்ந்த மரக் கம்பி கேட்...



ரிந்து அத்தனை பேரையும் அமுத்திக் கொண்டு விழுந்தது. ரஹீமும் அந்தப் பெண்ணும் தப்பி ஓடினர்.
சகோதரி, நீ யார் என்று தெரியாவிட்டாலும் முக்தி வாஹினியைச் சேர்ந்தவள் என்று நினைக்கிறேன். என் மறைவிடத்துக்கு உன்னை அழைத்துப் போய் என் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன் வா.
ரஹீமை எதிர்பார்த்து நவீனும் நண்பர்களும் காத்திருந்தனர்....
உன்னைக் காணோமே என்று தவித்துக் கொண்டிருந்தேன். வந்தாயே. விருந்தாளி யார்?
என்னைக் காப்பாற்றியது அவள்தான். இனி நம் தோழி அவள்.
அவள் தன் கதையைக் கூறினாள். அவள் பெயர் லைலா. அவள் தந்தை ஒரு ராணுவ அதிகாரி. ஆகவே அவள் குடும்பம் பாகிஸ்தானியரால் பழி வாங்கப்பட்டது. அவள் தங்கியிருந்த கல்லூரி ஹாஸ்டலில் புகுந்து பாக் வெறியர்கள் நடத்திய கொடுமையை லைலா சொன்னபோது ரஹீமின் இளரத்தம் கொதித்தது.
எனக்கு என் அப்பா துப்பாக்கி சுடப் பழக்கிக் கொடுத்திருக்கிறார். நான் பல பரிசுகள் வாங்கியிருக்கிறேன் இதோ பார் ஒரு பாராட்டுப் பத்திரம்.
இனி நீ எங்களோடேயே தங்கலாம்.
பெண்ணின் தலையீடு வந்ததுமே துடைப்பமும் குப்பையும் தலை தூக்கின!
இதென்ன இங்கு இவ்வளவு குப்பையும் கூளமும். இன்னும் சிறிது நேரத்தில் இந்த இடம் ஒழுங்காக வேணும்.
இதென்ன தொல்லை..?
சுத்தமும் ஒழுங்கும்தான் வாழ்க்கையை வளப்படுத்தும் ரஹீம். சரி, நான் என் வேலைகளைப் பார்க்கிறேன்.
வீட்டு வேலை செய்ய என்னால் முடியாது. வேலை முடிந்த பிறகு வெளியே வரலாம்.


இதே சமயத்தில் பாகிஸ்தானியர் இவர்களுடைய மறைவிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து வந்துவிட்டனர். காவலிருந்த ஜிம்மி உறுமியது.
ஆனால் தப்ப வழியின்றிப் பலர் சூழ்ந்து கொள்ள ரஹீமின் போராட்டம் பலன் தரவில்லை.
வேலைக்குப் பயந்து நான் ஒளிந்து கொண்டது நல்லதாகப் போயிற்று. என் நண்பர்களை எப்படியும் காப்பாற்றுவேன்.
ரஹீமையும் லீலாவையும் கைது செய்து கடைவீதி வழியே அழைத்துப் போய்க்-கொண்டிருந்தார்கள்...
நவீன், சாரைப் பாம்பு போலக் கூட்டத்திடையே புகுந்து ஒரு பாக் வீரனின் கைத் துப்பாக்கியை லாகவமாகப் பறித்துக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து ஓடினான்.
கடைத் தெருவின் நெரிசலில் பாகிஸ்தானியரால் வேகமாகப் போக முடியவில்லை. ஓர் இடத்தில் சற்றே தாமதித்த போது ஒரு கரம் லீலாவிடம் ஒரு கைத் துப்பாக்கியை நீட்டியது ரகசியமாக. அது நவீனின் கரம். அடுத்த வினாடி.
தொடரும்..


பறந்தபடியே தூங்கும் பறவை


பதினைந்தாம் நூற்றாண்டில் கடல் மார்க்கம் காணக் கப்பல்கள் கடல்களில் பவனி வந்த காலம். அப்போது சூயஸ் கால்வாயோ பனாமா கால்வாயோ கிடையாது. தென் அமெரிக்கா ஆப்பிரிக்காக் கண்டங்களைச் சுற்றிக் கொண்டுதான் வேறு நாட்டுக்குப் போனார்கள் மாலுமிகள். பூமியின் தென் முனைக்கு அருகே திசை தெரியாத நடுக் கடலில் கப்பல்கள் மிதந்து போகும்போது மாதக் கணக்காகக் கரையையோ பசுமையையோ காணாமல் மனம் சலித்துப் போன மாலுமிகளுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொடுத்தது வானத்தில் காணப்பட்ட ஒரு பறவை. கறுப்பும் வெளுப்புமாக மிக மிக நீண்ட கூரான இறக்கைகளைக் கொண்ட அந்தக் கடற் பறவைக்குப் பருத்த உடல். பல மணி நேரங்கள் கப்பலைப் பின் தொடர்ந்து வந்தது அந்தப் பறவை. பிடிப்பதற்காகத் தன் நீண்ட இறக்கைகளை அது அடித்துக் கொள்வதே இல்லை. ஆகாயத்தில் அந்தரத்திலே பரந்து விரிந்த இறக்கைகளோடு அது மிதந்து கொண்டிருந்தது. கப்பல் மேல் தளத்தில் அது உண்ணும்படியாக ஏதேனும் விழுமாயின் அதை நோக்கிக் குபீரென்று பாய்ந்தது.

போர்ச்சுகீசிய மாலுமிகள் இந்த விநோதப் பறவையை 'ஆல்கட்ராஸ்' என்று அழைத்தார்கள். போர்ச்சுகீசிய மொழியில் மிகப் பெரிய கடற் பறவைக்கு இதுதான் பெயர். ஆங்கிலேய மாலுமிகள் இதை 'ஆல்பட்ராஸ்' என்று உச்சரித்தார்கள். கடற் காற்றின் சக்கரவர்த்தியாக வானிலே மிதந்து செல்லும் இந்தப் பறவைக்கு 'ஆல்பட்ராஸ்' என்ற பெயரே நிலைத்து விட்டது.

ஆல்பட்ராஸ் என்ற கடற் பறவையில் பதின்மூன்று வகைகள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மிக மிக நீண்ட இறக்கைகள் உண்டு. மற்றப் பறவைகளைப்போல ஆல்பட்ராஸ்கள் பறப்பதற்கு இறக்கைகளை அடித்து அசைக்காது. அப்படி இறகுகளை அது அசைத்து அடிக்குமானால் அதன் பறக்கும் வேகம் குறைந்து கடலுக்குள் விழுந்துவிட நேரிடும். காற்றிலே கிளைடரைப்போல் மிதந்தபடிதான் இது பறக்கும். இதனால்தான் கடலில் எங்கே சுழல் காற்றும் புயற்காற்றும் அதிகமோ அந்தப் பகுதிகளில் மட்டுமே ஆல்பட்ராஸ் பறவைகள் வசிக்கின்றன. மாலுமிகள் இப்பறவைகளை எங்கு அதிகமாகக் காண்கிறார்களோ, அங்கு காற்று மிக மோசமாக வேகத்துடன் வீசும் என்று தெரிந்து கொள்ளுவார்கள். இப்படிக் காற்றில் மிதந்தபடியே இப்பறவைகள் ஒருநாளில் முந்நூறு மைல்கள் வரை பறந்து செல்லும். உலகை ஆறு வாரங்களில் இப்பறவைகள் சுற்றி வந்துவிடும். 'ஊர் சுற்றி ஆல்பட்ராஸ்' என்பது கடல் பறவைகளிலேயே மிகப் பெரிய பறவை. இதன் உடலின் கனம் பதினெட்டு பவுண்டுகள்தானானாலும் இது தன் இறக்கைகளை விரித்தால் அதன் நீளம் பதினேழு அடிகள் இருக்கும்.

ஆல்பட்ராஸ் குஞ்சாக இருக்கும்போது சாம்பல் நிறமாக இருக்கும். வளர்ந்து வாலிபப் பருவம் அடையும்போது பால் வெள்ளை உடலும் இறகுகளின் நுனி மட்டுமே கறுப்பாகவும் மாறுகின்றது. ஊர் சுற்றி ஆல்பட்ராஸ் பொழுதெல்லாம் ஆகாயத்திலேதான் மிதந்தபடி பறந்து கொண்டிருக்கும். உணவுக்கு மீன்களைப் பிடிப்பதற்காகவே கடலில் இறங்கும். நீரிலிருந்து மறுபடியும் வானில் கிளம்ப இப்பறவை நீண்ட இறகுகளை விரித்தபடி நீர்ப்பரப்பின் மேலாகத் தனது தோல் மூடிய விரல்களைக் கொண்ட கால்களால் துடுப்பால்






நீரைத் தள்ளுவதைப்போல் தள்ளிய படியே எழுபது எண்பது கெஜ தூரம் வரை ஓடும். விமானம் மேலே கிளம்ப விமான தளத்தின் ரன்வேயில் ஓடுவதில்லையா? அதே நிலைதான் இந்த ஆல்பட்ராஸ் மேலே கிளம்புவதும். தன்னை மேலே தூக்கி விடுவதற்காகக் காற்றின் வேகத்தை அதிகமாக்குகிறது. மேலே கிளம்பி விட்டால் அதன் பிறகு இறக்கைகளை அசைக்காமலே கிளைடரைப்போல் இது மிதந்தபடி வேகத்தை அதிகமாக்கிக் கொண்டு பறக்கும். பல நாட்கள் இரவு பகல் இல்லாமல் இப்பறவை விண்ணிலே பறந்து கொண்டிருக்கும். இப்படிப் பறந்த நிலையிலேயே இதனால் தூங்கவும் முடியும். விந்தையல்லவா?

முட்டையிடும் பருவத்தில் ஆல்பட்ராஸ்கள் மனிதர்கள் யாருமற்ற தனிமையான தீவுகளை நாடிப் போகின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்து சேற்றினாலோ மண்ணாலோ கூடு கட்டுகிறது. இதன் மேல் பாகம் குழிவாகத் தட்டுப் போல் இருக்கும். இதில் பெண் பறவை நான்கு அங்குல நீளமுள்ள வெண்மையான ஒரே ஒரு முட்டையை இடுகிறது. அடை காப்பதைத் தாயும் தந்தையும் முறை போட்டுக் கொண்டு பகிர்ந்து கொள்ளுகின்றன. முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர அறுபது நாட்கள் ஆகின்றன. குஞ்சுகளின் உடலில் இறக்கைகள் வளர மூன்று மாதங்களாகின்றன. அப்பாவையும் அம்மாவையும்போல் ஆகாயத்தில் பறக்க நீண்ட இறக்கைகளையும் அதில் வலுவையும் பெறக் குஞ்சுகளுக்கு ஒன்பது மாதங்களாகின்றன. தாய்மை அடையும் காலங்களில் இப்பறவைகள் சர்க்கஸ்காரர்களைப்போல நாட்டியமாடும். அலகினால் ஒருவித இன்னிசையையும் எழுப்பும். இது அந்த நடனத்துக்குப் பின்னணி சங்கீதம் போலிருக்கும்.

ஆதி காலத்தில் மாலுமிகளிடையே ஆல்பட்ராஸ் பற்றிப் பல விரோதமான நம்பிக்கைகள் நிலவி வந்தன. ஒரு கப்பலை இப்பறவை தொடர்ந்து வருமானால் அக்கப்பலுக்கு அதிர்ஷ்டம் என்றும் தொடர்ந்து வந்த பறவை அக்கப்பலை விட்டு விலகிப் போகுமானால் அக்கப்பலுக்கு ஏதோ அபாயம் நேருமென்றும் நம்பினார்கள். மாலுமிகள் இப்பறவையிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள். மாலுமிகள் தங்கள் பரிபாஷையில் இப்பறவையைக் 'குனே' என்றும் 'மோலி மாக்ஸ்' என்றும் அழைப்பார்கள். 'குனே' என்றால் ஆங்கிலத்தில் 'மந்த புத்திக்காரன்' என்று பொருள். டச்சு மொழியில் 'மோலி மாக்' என்றாலும் இதே பொருள்தான். ஜப்பானியர்கள் ஆல்பட்ராஸ் பறவைகளைப் 'பாகாதாரி' என்கிறார்கள். பாகாதாரி என்றால் என்ன தெரியுமா? 'பறவைகளில் ஒரு முட்டாள்' என்பதாகும். இந்தப் பறவைக்கு ஏன் இப்படியெல்லாம் முட்டாள் பட்டம் கட்டுகிறார்கள்? ஒரு வேளை அதன் அப்பாவித்தனமான தோற்றமும் பார்வையும்தான் இதற்குக் காரணமோ?

— கிட்டு



■ யானையின் பார்வை கூர்மையானது அல்ல. 75 அடிக்கு அப்பால் உள்ளதைக் கூட யானையால் சரியாகப் பார்க்க முடியாது! ஆனால், அதற்கு மோப்ப சக்தி அதிகம். 'யானை எதனால் முகருகிறது' என்று கேட்டால் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? 'துதிக்கையினால்' என்றுதானே சொல்வீர்கள்? அது தவறு! யானை முகருவது துதிக்கையினால் அல்ல; வாயில்தான் அதற்கு வாசனை நரம்புகள் இருக்கின்றன.

■ உலகிலேயே மிகவும் அகலமான கொம்புள்ள பிராணி மூஸ் என்னும் மான். அது 7 முதல் 8 அடி உயரம் இருக்கும். அதன் கொம்புகள் சுமார் 6 அடி அகலம்கூட இருக்கும்! ஒரு கொம்பின் பரப்பில் ஒரு மனிதன் படுத்துப் புரளலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!





சிரிக்கச் சிரிக்க...!
சோபா
தங்கை: குரங்கை அடிக்கிறயா? அம்மாகிட்டச் சொல்றேன்.
அண்ணன்: அடிக்கவில்லே, அம்மா செய்த சிடைகளை ஒவ்வொன்றுகக் குரங்கின் வாய்க்கு அனுப்புகிறேன்!
தங்கை: அப்படியா சேதி? இதையும் அம்மாகிட்டச் சொல்றேன் இரு.
"பிடில் வாத்தியாரே! ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?"
"உங்க பிள்ளே, பிடில் வில்லேக் காட்டி இது என்ன என்றான். 'வில்' என்றேன். அவனுக்கு என்ன தோணித்தோ தெரியல்லே. அதோ அவன் செய்வதை நீங்களே பாருங்கோ."
என்ன காத்து!
என் குடை கவிழ்ந்தது!
"விஷமம் பண்ணுமல் இருக்கத்தானே உனக்குச் சாக்லேட் கொடுத்தேன்? மறுபடியும் விஷமம் பண்ணுகிறயே?"
"மறுபடியும் சாக்லேட் வேணும்போல இருக்கு அம்மா!"
"முடியை எப்படி வெட்டணும்னு உங்கம்மா சொல்லி அனுப்பிருக்க?"
"காதை மட்டும் விட்டுவிட்டு எப்படி வேணும்னுலும் வெட்டச் சொன்னுங்க!"

டடக்கட்டி முடக்கட்டி!

— பெ. தூரன் —

ஒரு கிழவன் கழுதை ஒன்று வளர்த்து வந்தான். அவன் குடியிருந்த குடிசை ஒரு காட்டுக்குப் பக்கத்தில் இருந்தது. அதனால் காட்டிலிருந்து விறகு வெட்டி ஒரு சுமையாகக் கட்டி அந்தக் கழுதையின் முதுகில் வைத்துப் பக்கத்து ஊர்களில் விற்பான். இப்படி அவன் வாழ்க்கை நடந்தது. சிறு வயசிலிருந்து பெரிய சுமையைச் சுமந்து கொண்டு சென்றதால் கழுதையின் பின்னங்கால் இரண்டும் வளைந்து ஒன்றோடொன்று இடித்துக் கொண்டும், அது நடக்கும் போது டடக்கட்டி முடக்கட்டி என்று சத்தமும் கேட்கும். அதனால் அந்தக் கிழவன் அதற்கு, ''டடக்கட்டி முடக்கட்டி'' என்றே பெயர் வைத்தான்.

அதோடு அவன் அந்தக் கழுதைக்கு நல்ல செம்மண்ணினால் இரண்டு பக்கமும் சாயம் பூசினான். அதன் மத்தியில் பட்டை பட்டையாகக் கரியைக் கொண்டும் சுண்ணாம்பைக் கொண்டும் தீட்டி வைத்தான். ஒரு பழைய தொப்பி எங்கோ அவனுக்குக் கிடைத்தது. தலையிலே அலங்காரமாக அந்தத் தொப்பியைக் காதுகளை விட்டு விட்டுக் கட்டி வைத்தான். அந்தத் தொப்பிக்கும் விதம் விதமாகச் சாயம் அடித்திருந்தான்.

பார்ப்பதற்குக் கழுதை என்றே தெரியாது. அப்படிச் செய்திருந்தான். விறகுச் சுமையை விற்று விட்டு மாலையில் வந்ததும் டடக்கட்டி முடக்கட்டியை அவிழ்த்து விட்டுவிடுவான். அது விடியும் வரை எங்கோ சுற்றி மேய்ந்து விட்டுக் காலையில் வரும்.

ஒருநாள் அது காட்டுப் பக்கம் சென்றது. பசும் புல் நன்றாக வளர்ந்திருப்பதைப் பார்த்து அதிக ஆசை கொண்டு வனத்துக்குள்ளே நெடுந்தூரம் சென்று விட்டது.

அங்கு ஒரு புலி எதிரே வந்தது. பேராசையால் உயிருக்கே ஆபத்து வரும் போலிருந்தது. இருந்தாலும் தைரியத்தை இழக்காமல் தப்பிக்கப் பார்க்க வேண்டும் என்று கழுதை எண்ணிற்று.

புலி மிகவும் பலமுள்ளது. ஆனால் அது சந்தேகப் பிராணி. திடீரென்று கழுதையின் மீது பாய விரும்பவில்லை புலி. 'நாம் பார்த்த விலங்குகள் போல் இது இல்லையே — இதன் மேல் பாய்ந்தால் ஒருவேளை ஆபத்து வருமோ?' என்று யோசித்தது.

பிறகு ''உன் பெயர் என்ன?'' என்று மெதுவாகக் கழுதையிடம் கேட்டது.

''டடக்கட்டி முடக்கட்டி'' என்றது கழுதை தைரியமாக.



பெயரைக் கேட்டதும் மேலும் சந்தேகம் ஏற்பட்டது. 'இப்படி ஒரு பெயரை நாம் இதுவரை கேள்விப்பட்டது இல்லையே! இருந்தாலும் நன்கு விசாரிப்போம்' என்று புலி தீர்மானம் செய்தது.

''உனக்கு அண்ணன்மார் உண்டா?''

''இரண்டு பேர் உண்டு. மூத்தவன் பெயர் கடக்கட்டி முடக்கட்டி. இரண்டாவது அண்ணன் பெயர் சடக்கட்டி முடக்கட்டி'' என்றது கழுதை.

இந்தப் பெயர்களைக் கேட்டதும் புலிக்கு இன்னும் சந்தேகம் அதிகமாகி விட்டது.

''பேரெல்லாம் விநோதமாக இருக்கிறதே ?'' என்று கேட்டது புலி.

''ஆமாம். மூத்த அண்ணன் புலியைக் கடக் என்று கடித்துவிடுவான். இளைய அண்ணன் புலியின் முதுகெலும்பைச் சடக்கென்று கடிப்பான். நான் டடக் என்று கடிப்பேன். அதனுல் அப்படிப் பெயர் வந்தது !'' என்றது கழுதை.

''ஆமாம், முடக்கட்டி என்று உங்கள் எல்லாருக்கும் பொதுவாக எப்படிப் பெயர் வந்தது?''

''அதுவா, அது எங்கள் வீரத்தை விளக்கும் அருமையான பட்டப் பெயர்'' என்று கழுதை தலையை நிமிர்த்திக் கொண்டு சொல்லிற்று.

'' யார் கொடுத்தது ?''

'' நம்ம சிம்ம ராஜா கொடுத்தது தான் அந்தப் பட்டம்.''


'' எதற்காக அப்படிக் கொடுத்தார் ?''

''மூத்த அண்ணன் நூறு புலிகளைக் கடக் என்று கடித்தார். சின்ன அண்ணன் இருநூறு புலிகளைச் சடக் என்று கடித்துக் கொன்ருர். நான் இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது புலிகளை டடக் என்று கடித்துக் கொன்றேன். அதற்காக ராஜா எங்களுக்குக் கொடுத்த பட்டம் அது. இப்பொழுது நீ வந்து அகப்பட்டிருக்கிருய். உன்னையும் டடக் என்று கடித்துக் கொல்லப் போகிறேன். அப்போ சரியாக முந்நூறு ஆகிவிடும். பெரிய அண்ணன் நூறு கடக். சின்ன அண்ணன் இருநூறு சடக். நான் உன்னையும் சேர்த்து முந்நூறு டடக்'' என்றது கழுதை.

புலி பயந்து ஓடியே போயிற்று!

''பசும் புல்லைக் கண்டு பேராசையால் காட்டுக்குள் புகுந்ததால் உயிரே போய் விடும் போலிருந்தது. நல்ல வேளை, அறிவைப் பயன்படுத்தித் தப்பித்தேன். இனி மேல் இவ்வளவு தூரம் வரவே மாட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே கிழவனுடைய குடிசையை நோக்கி வேகமாகக் கழுதை நடந்தது. அப்பொழுது அதன் பின்னங்கால்கள் ''டடக் கட்டி, முடக்கட்டி, டடக்கட்டி முடக் கட்டி'' என்று சத்தம் செய்து கொண்டிருந்தன !





கண்டு கற்போம்

சின்னப் பாப்பா சிறுவர்களே!
ஜெகத்திற் கியற்கை புகட்டுகின்ற
நன்மை தருநல் நீதிகளை,
நாளும் உணர்ந்து நடந்திடுவோம்

தேனீ உழைப்பைத் தெரிந்துகொண்டு
தினமும் அதுபோல் பணிசெய்வோம்
யானை போலத் தொண்டாற்றி,
இருந்தும், இறந்தும் புகழுறுவோம்.

காகம் போலவே பகிர்ந்துண்ணும்
கண்ணியம் மிகவே போற்றிடுவோம்
மேகம் போலவே உதவி நிதம்
மேவும் புகழை அடைந்திடுவோம்

மானைப் போலவே மானமதை
மாண்புடன் பேணிப்போற்றிடுவோம்
காணும் சின்ன எறும்பினைப் போல்
கணமும் அயரா துழைத்திடுவோம்

நாயைப் பார்த்து நாம் கற்போம்,
நன்றி செய்யும் நற்குணமே.
மேயும் பசுவைப் போலவே நாம்,
மிகவும் சாந்தம் கொண்டிடுவோம்

காட்டு ராஜா சிங்கம்போல்,
கலங்கா உள்ளம் பெற்றிடுவோம்!
நாட்டில் நல்ல செயல்களையே,
நாடிச் செய்து உயர்ந்திடுவோம்!

- பெ. ஆ. சி. வயிரவன்



உப்புமா !

உப்புமா! உப்புமா!
உனக்கு இது பத்துமா!

அரிசி நொய்யை வறுத்துக் கொட்டி
அம்மா செய்த உப்புமா!
அரிஞ்சி போட்ட வெங்காயம்
அது மணக்கும் உப்புமா!

உப்புமா! உப்புமா!
உனக்கு இது பத்துமா!

பொன்னிறமாய் வறுத்துப் போட்ட
பருப்பி ருக்கும் உப்புமா!
என்ன.... என்ன... போதுமா?
ஒன் உடம்பு உப்புமா?

உப்புமா! உப்புமா!
உனக்கு இது பத்துமா!

- வேலூர் வள்ளல்

பூமி சுற்றுகிறது!

பைசா நகரம் இத்தாலி நாட்டில் இருக்கிறது. இங்குதான் புகழ்பெற்ற சாய்ந்த கோபுரம் உள்ளதென்று உங்களுக்கெல்லாம் தெரியும், இல்லையா? அந்த நகரில் உள்ள ஒரு மாதா கோயிலில் 1583ம் ஆண்டு ஒரு வைத்தியக் கல்லூரி மாணவன் பிரார்த்தனைக்காகத் தலை குனிந்தபடி அமர்ந்திருந்தான். அவனுக்கு வயது பத்தொன்பது. கதீட்ரலில் அமைதி நிலவி இருந்தாலும் அதன் விதானத்திலிருந்து சங்கிலியில் பிணைக்கப்பட்டுத் தொங்கிய ஒரு பித்தளை விளக்கு இங்கும் அங்கும் ஊசலாடுவதினால் ஏற்படும் ஒலி மட்டும் துல்லியமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. வைத்தியம் பயிலும் இளைஞனின் கவனம் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்குப் பதில் அந்த விளக்கின் அசைவிலே பதிந்தது. அதன் அசைவைத் தன் நாடித் துடிப்புடன் கணக்கிடலானான். திடீரென்று ஓர் உண்மை அவன் உள்ளத்திலே பளிச்சிட்டது. விளக்கு ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குப் போக ஒவ்வொரு தடவையும் எடுத்துக் கொள்ளும் நேரம் ஒரே சீராக இருந்தது. வர வர அதன் பிரயாண தூரம் மட்டும்தான் குறைந்ததே தவிர நேரம் மாறவில்லை. இந்த முடிவினால் வசீகரிக்கப்பட்ட அந்த இளைஞன் உடனே வீட்டுக்கு ஓடினான். தன் முடிவை நிச்சயப்படுத்திக்கொள்ள, இரண்டு நூல் கயிற்றை எடுத்தான். ஒன்றின் நீளம் நான்கு அடி. மற்றதின் நீளம் இரண்டு அடி. இரண்டிலும் ஒரு கனமான பொருளைக் கட்டித் தொங்க விட்டான். இரண்டையும் ஒரே சமயத்தில் ஊசலாட வைத்து அதன் சலனத்தைக் கணக்கிடலானான். முடிவு வியப்பூட்டுவதாக இருந்தது. மாறுபட்ட நீளங்களைக் கொண்டதானாலும் இரண்டும் ஒரே எண்ணிக்கையான அசைவுகளைக் கொண்டு ஒரே சமயத்தில் ஆடி அடங்கி அமைதி பெற்றது. இந்த மகத்தான கண்டுபிடிப்புதான் பிற்காலத்தில் காலத்தைக் கணிக்கும் கடிகாரங்களில் பெண்டுலத்தைப் பொருத்துவதற்கு உதவியாக இருந்தது.

கதீட்ரலில் எண்ணெய் விளக்கின் ஊசலாட்டத்திலே இந்த உண்மையைக் கண்டவர்தான் **காலிலியோ காலிலி.** உலகின் மிகப் பெரிய விஞ்ஞானியாகப் பிற்காலத்தில் புகழ் பெற்றவர்.

1564ம் ஆண்டு பைசா நகரில் பிறந்தவர் காலிலியோ. தகப்பனார் பிரபல பாடகர். சின்ன வயதிலேயே காலிலியோவின் ஆராய்ச்சி மனப்பான்மை வெளிப்பட்டது. பிறருடைய முடிவை அப்படியே ஏற்க மாட்டார். அதைத் தானே ஆராய்ந்து அறிந்த பிறகுதான் ஒப்புக் கொள்ளுவார். பள்ளியில் படித்தபோது காலிலியோவின் விருப்பப் பாடங்கள் சங்கீதமும் ஓவியமும்தான். விஞ்ஞானத்திலே நாட்டம் விழவில்லை. அப்பாவுக்குக் கவலை. தம் பிள்ளை பிற்காலத்தில் இசையையும் ஓவியத்தையும் கொண்டு வாழ முடியாதென்று அவனை மருத்துவப் படிப்பில் சேர்த்தார். காலிலியோவுக்கோ மருத்துவப் படிப்பில் மனம் செல்லவில்லை. கணிதத்தில்தான் அவர் கவனம் சென்றது. ஆனால் தகப்பனாருக்குப் பயந்து மருத்துவம் படித்தாலும் ரகசியமாகக் கணிதத்தைக் கற்கலானார். அந்தக் காலத்தில் கணிதம் கற்றவர்களின் வாழ்க்கை வறுமையில்தான் வாடியது. மருத்துவம், விஞ்ஞானம் இவற்றுக்குத்தான் மதிப்பிருந்தன. ஆனால் காலிலியோவோ 'இயற்கையின் பாஷையைப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்குக் கணிதக் கலை இல்லாமல் முடியாது' என்ற முடிவுடன் இருந்தார். 'உதவாக்கரை எண்களோடு உறவாடிக் கொண்டுள்ள இந்தக் கிறுக்கனுக்கு நாங்கள் மருத்துவப் பட்டம் தர முடியாது' என்று மறுத்து விட்டார்கள் காலிலியோவின் மருத்துவப் பேராசிரியர்கள். மருத்துவப் படிப்பில் தோல்வியோடு வெளியேறிய காலிலியோவைக் கணிதம் கைவிடவில்லை. அவரது ஆராய்ச்சிகளையும் ஆர்வத்தையும் கணித முடிவுகளை விளக்கும் லாகவத்தையும் கண்ட அந்தக் காலத்துக் கணித மேதைகள் காலிலியோவை 'இக்கால ஆர்க்கிமிடீஸ்' என்று பாராட்டினார்கள். ஆகவே, பைசா நகரத்துக் கலாசாலையில் காலியாக இருந்த கணிதப் போதகர் பதவி அவருக்கு இலகுவாகக் கிடைத்தது. காரணம் அந்த வேலையைச் சிந்துவார் யாரும் இல்லை.

அந்தக் காலத்தில், அதற்கு முன்னால் தோன்றிய அறிவாளிகள் கூறியதை அப்படியே ஏற்றுக் கொண்டதோடு அதைப் பற்றிய மறுப்பையோ மாற்று முடிவுகளையோ யாரும் கேட்க மாட்டார்கள்.

பதினேழு வயதில் காலிலியோ கணிதமும், இயந்திர நுணுக்கமும் படித்துக் கொண்டிருந்த போது கலாசாலையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் போதகர் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஐந்து பவுண்டு எடையுள்ள ஒரு பொருளையும் ஒரு பவுண்டு எடையுள்ள ஒரு பொருளையும் உயரமான இடத்திலிருந்து கீழே வீசினால் ஒரு பவுண்டு எடையுள்ள பொருளை விட ஐந்து பவுண்டு எடையுள்ள பொருள் ஐந்து மடங்கு வேகத்தில் பூமியை வந்தடையும்.'' எப்போதுமே எதையும் ஆதாரத்துடனே ஏற்றுக் கொள்ளும் காலிலியோ எழுந்தார். ''ஐயா! இது எப்படிச் சாத்தியம்? உங்களால் நிரூபிக்க முடியுமா?'' என்று கேட்டார். ஆசானுக்கு ஆத்திரம் வந்தது. ''அரிஸ்டாடில் இப்படித்தான் கூறி யிருக்கிறார். முட்டாள் பையனே, அவர் முடிவை யாரும் சந்தேகித்ததில்லை, — கூடாது. உட்காரு'' என்று கூறிவிட்டார்.

அன்று காலிலியோ வகுப்பில் உட்கார்ந்துவிட்டாலும் அந்தத் தத்துவம் அவர் உள்ளத்திலே வெகு நாட்களாக அரித்துக் கொண்டிருந்தது. அவர் படித்த அதே கல்லூரியில் இப்போது அவர் கணித போதகர். ''எந்த ஒரு விஞ்ஞானத் தத்துவத்தையும் அது உண்மை என்பது நிரூபணமான பிறகு தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று மாணவர்களுக்குப் போதிக்கலானார் காலிலியோ. ஆரம்பத்திலிருந்தே காலிலியோவின் புரட்சிக் கருத்துக்களை ஏற்காத பேராசிரியர்கள் இப்படி இவர் மாணவர்களுக்குப் போதிப்பதை எதிர்க்கலானார்கள். ''இரண்டு மாறுபட்ட எடையுள்ள பொருள்கள் ஒரே சமயத்தில் பூமியை நோக்கி வீசப்படும் போது ஒரே வேகத்தில்தான் பூமியை அடையும் என்பது எத்தனை பேத்தலான கருத்து! இதைச் சொல்பவன் ஒரு முட்டாள். எல்லார் முன்னிலையிலும் இதை நிரூபிக்க முடியுமா, இந்தக் காலிலியோவினால்?'' என்று சவால் விட்டார்கள் அவர்கள்.


இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் காலிலியோ. சவாலை ஏற்றுக் கொண்டார். நாள் குறிக்கப்பட்டது. இடம் பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம். அதைச் சுற்றி மக்கள் வெள்ளம். பேராசிரியர்களும் நகரின் பெரியதனக்காரர்களும் மதபோதகர்களும் மாணவர்களுமாகக் கூடியிருந்தார்கள். யாருக்குமே நம்பிக்கை இல்லை. காலிலியோ மூக்கறுபடப் போவதாகவே எண்ணினர். காலிலியோவிடம் ஒரு பத்துப் பவுண்டு எடைக் கல்லும் ஒரு பவுண்டு எடைக் கல் ஒன்றும் இருந்தன. ஏழாவது உப்பரிகைக்கு ஏறியவர், இரண்டு கைகளிலும் அவ்விரு எடைக் கற்களையும் ஏந்தி நின்றவர், ஒரே சமயத்தில் இரண்டு எடைக் கற்களையும் கீழே நழுவ விட்டார்.

'பெரிய எடைக் கல்தான் முதலில் பூமியை வந்தடையும் பார்' என்று சிலர் கிசுகிசுத்தனர். 'அசட்டுக் காலிலியோ அவமானப்படப் போகிறார்' என்று அகம்பாவத்துடன் நின்றிருந்தனர் பலர். ஆனால் நடந்ததோ அவர்கள் யாரும் எதிர்பாராத அதிசயம். இரண்டு மாறுபட்ட எடைக் கற்களும் ஒரே சமயத்தில் பூமியில் பொத்தென்று வந்து பதிந்தன!

''இது ஏதோ மந்திர வேலை....''

''சூனியச் செயல்.....''

''இங்கு பார்த்ததை நான் உண்மை என்று ஒப்புக் கொள்ள மாட்டேன்!'' இப்படிப்பட்ட பேச்சுக்கள்தாம் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டன. ஆனால்



காலிலியோ தம் முடிவை நிரூபித்து விட்டார். அதை அன்றைய அறிவாளிகள் ஏற்காதது மட்டுமல்ல, இம்மாதிரியான புரட்சிக் கருத்துக்களைக் கொண்டவரைத் தண்டிக்கவும் முற்பட்டார்கள். 'இவனைச் சர்வகலாசாலையில் வைத்திருந்தால் இளம் உள்ளங்களைப் பாழ்படுத்திவிடுவான்' என்று வெளியேற்றத் திட்டமிட்டு அதில் வெற்றியும் கண்டனர்.

ஆனால் அறிவாளியும் சிந்தனையாளருமான காலிலியோவைக் கைநீட்டி வரவேற்றது வெனிஸில் உள்ள பாதுவா சர்வகலாசாலை. ஊதியமும் அதிகம். மாதம் இருநூறு பவுன்கள். அது மட்டுமா? பூரணமான சிந்தனைச் சுதந்திரம். கட்டுப்பாடோ கண்காணிப்போ இல்லாமல் தமது ஆராய்ச்சிகளைச் செய்ய முடிந்தது, காலிலியோவினால். இங்கிருந்துதான் காலிலியோ தமது பல புதிய கண்டுபிடிப்புக்களை உலகுக்கு அளித்தார். காந்தத்தின் அதிசயங்களைப் பற்றி ஆராய்ந்தது இங்குதான். திசை காட்டும் கருவியை உருவாக்கியவர் காலிலியோ. தர்மாமீட்டரைக் கண்டுபிடித்தவர் காலிலியோ.

இவை எல்லாவற்றையும்விட ஒரு முக்கியமான உண்மையை அவர் அறிந்து கூறினார். அதுவரை வானவெளியில் பூமி நிலையாக நிற்பதாகவும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மற்றும் கிரகங்கள் ஆகியவைதான் பூமியைச் சுற்றி வருகின்றன என்றும் நம்பி வந்தார்கள். இதற்கு நேர்மாறான ஆனால் நிலையான உண்மையை அறிந்து கூறினார் காலிலியோ. அது எப்படிச் சாத்தியமாயிற்று?

1609ம் ஆண்டில் காலிலியோ ஒரு செய்தியைக் கேள்விப்பட்டார். டச்சு தேசத்து மூக்குக் கண்ணாடி வியாபாரியான ஹான்ஸ் லிப்பர்ஹே என்பவர் தற்செயலாக ஒரு கண்டுபிடிப்புக்கு ஆளாகியிருந்தார். தம் கடையில் மூக்குக் கண்ணாடி வில்லைகளைக் கையாளும் போது — குழி வில்லையின் மீது குவி வில்லையை வைத்துப் பார்த்ததில் தூரத்திலுள்ள பொருள்கள் மிக அருகே வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தச் செய்தி ஆராய்ச்சி மனப்பான்மை கொண்ட காலிலியோவுக்கு அதிசயமாகப் படவே அதில் தீவிர கவனம் செலுத்தலானார். அவரது கணித மூளையும் ஆராயும் திறனும் பலவிதமான லென்ஸ்களைக் கொண்டு சோதனைகள் நடத்தி முடிவில் டெலஸ்கோப்பை — தூரதரிசினி — உருவாக்க வைத்தது. 1609ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21ந் தேதி உலகத்துக்கு ஓர் அதிர்ஷ்ட தினம். அன்றுதான் காலிலியோ தமது கண்டுபிடிப்பான டெலஸ்கோப்பைப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். அதன் மூலமாகப் பார்த்தவர்கள் அது ஒரு மாயக் கண்ணாடி என்று மயங்கினர். பல மைல்களுக்கு அப்பாலுள்ள குன்றின்மீதிருந்த மாதா கோயிலில் மக்கள் இயங்கும் காட்சியை வெகு துல்லியமாக மிக மிக அருகே காண்பதானால் அவர்களுக்குப் பரபரப்பு மட்டுமா ஏற்படும்? ஒரு விதப் பயமும்கூட ஏற்பட்டது. காலிலியோ ஒரு மந்திரவாதி, சூனியக்காரர் என்றுகூட எண்ணலாயினர்.

புகழும் பொருளும் பதுவாவில் கிடைத்தாலும் காலிலியோவின் மனம் என்னவோ தாம் பிறந்த ஊரான பைசாவிலேயே இருந்தது. இங்கு இத்தனை பெரிய பதவி இருந்தபோதும் பைசா சர்வகலாசாலையில் ஒரு சாதாரண கணிதப் போதகராக இருப்பதையே விரும்பினார். இதை விதி என்றுதான் கூற வேண்டும். விடாமல், பிளாரன்ஸ் நகரக் கோமகனுக்குத்



தம்மைப் பைசா சர்வகலாசாலையில் ஏற்றுக் கொள்ளும்படி எழுதிக்கொண்டிருந்தார். ஆனால் இவரது வேண்டுகோள் செவிடன் காதுச் சங்காகியது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அவரது வேண்டுகோள் ஏற்கப்பட்டது. பதுவா சர்வகலாசாலையில் வாழ்நாள் முழுதும் பணிசெய்யக் கேட்டுக்கொண்ட உயர்ந்த பதவியைத் துறந்து விட்டுப் பைசா நகரத்துச் சர்வகலாசாலையில் ஒரு சாதாரணப் பதவியை ஏற்றுக் கொண்டார். அத்துடன் துன்பங்களையும் துயரங்களையுமேகூட ஏற்றுக் கொண்டார்.

பதுவா நகரில் சுதந்திர புருஷராக இருந்தபோது எழுதிய ஒரு புத்தகத்தில் அவர் கூறிய கருத்துக்களுக்காக மடாலயத் தலைவர்களின் விசாரணைக்கு உட்படும்படியாயிற்று. கருத்து விண்வெளி ஆராய்ச்சியைப் பற்றியதுதான். தமது அற்புத மந்திரக் கண்ணாடியான தொலைநோக்கி மூலம் கண்ட உண்மைகளை அதில் விளக்கியிருந்தார். அதுமட்டுமல்லாமல் பைசா நகரில் பல பேராசிரியர்களை அழைத்துத் தம் தொலைநோக்கி மூலம் விண்வெளியைப் பார்க்கும்படி செய்து அவர்களுக்குத் தம் முடிவுகளை விளக்கினார். ஆனாலும் அவர்கள், '' எங்கள் நிஜக் கண்களால் பார்ப்பதையே நம்புகிறோம். உன் யந்திரத்தில் ஏதோ சூனிய சக்தி உள்ளது. அது உன்னை அழிக்கு முன் நீ அதை அழித்துவிடு'' என்று எச்சரித்தார்கள் காலிலியோவை.


1616ம் ஆண்டு மார்ச் மாதம் 26ந் தேதி காலிலியோ மதத் தலைவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு நிறுத்தப்பட்டார். தம்முடைய சூரியன், பூமி, நட்சத்திரங்கள் சம்பந்தமான கருத்துக்களைக் கைவிட்டுவிடுவதாகவும், இனி அவைகளைப் பற்றி நினைக்கவோ, போதிக்கவோ, எழுதவோ, அவைகளுக்காக வாதாடவோ மாட்டேன் என்று பலவந்தமாக எழுதிக் கையொப்பம் வாங்கிக் கொண்டு காலிலியோவை விடுதலை செய்தார்கள்.

மனமொடிந்து போன காலிலியோ பிளாரன்ஸ் நகருக்குப் போய்த் தனிமைச் சிறையில் இருந்தார். ஆனாலும் அவரால் வானத்தை ஆராயாதிருக்க முடியவில்லை. பூமியில் போட்ட விதை எப்படி முளைக்காமல் போகாதோ அப்படியே அறிவாளிகளும் தங்களுக்குத் தோன்றிய உண்மைகளை, அதனால் என்ன துன்பம் ஏற்பட்டாலும் சொல்லாமல் இருக்கமாட்டார்கள். பிளாரன்ஸ் நகர அதிகாரிகள் காலிலியோ மற்றொரு புத்தகம் வெளியிட அனுமதித்தார்கள். ஆனால் ரோமாபுரி அதிகாரிகள் அந்தப் புத்தகத்துக்காக மறுபடியும் காலிலியோவைக் கைது செய்து விசாரணைக்கு வர ஆணையிட்டனர். இந்த நிலையில் காலிலியோ நோய்வாய்ப் பட்டார். அவரால் ரோமுக்கு வர முடியாத நிலை என்று மருத்துவர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனாலும் ரோமாபுரியில் உள்ள கல்நெஞ்சக்காரர்கள், '' உடல் நிலை எப்படியானாலும் அவரை விலங்கிட்டுக் கட்டி இழுத்து வரவேணும் '' என்று கட்டளையிட்டார்கள்.


1633ம் ஆண்டு ஜனவரி மாதம். மாரிக் காலம். மோசமான உடல்நிலையில் காலிலியோ ரோம் வந்தார். மனத்தாலோ, உடலாலோ தம் பக்கத்து நியாயங்களை எடுத்துக் கூறி வாதாட முடியாத நிலை. விசாரணை ஆறு மாதங்கள் நீடித்தன. முடிவில், ''என்னுடைய அறியாமையினாலும், அசட்டு ஆசையினாலும் நான் கற்பனையாகச் சில விஷயங்களைக் கூறி விட்டேன். இதன் மூலம் நான் பூமி சூரியனைச் சுற்றவில்லை என்று சத்தியம் செய்து கூறுகிறேன்'' என்று எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தார் காலிலியோ. பலவந்தமாகத்தான். எழுதிக் கொடுத்தபின் தெம்பிழந்து தொய்ந்த நிலையிலுள்ள அவரது உடலைத் தாங்கியபடி அழைத்து வந்த நண்பர்களின் காதுகளில் மட்டும் விழும்படியாக, ''ஆனால் பூமி நிலையாக இல்லை. சூரியனைச் சுற்றிச் சுழலத்தான் செய்கிறது'' என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன.

காலிலியோவின் புத்தகங்களை மக்கள் படிப்பதற்கும் தடை விதித்தார்கள், மதகுருமார்கள். அவர்களாக விரும்பி விடுதலை அளிக்கும்வரை காலிலியோவைச் சிறையில் தள்ளும்படியும் கட்டளையிட்டார்கள். சிறையிலும் காலிலியோ தம் ஆராய்ச்சியைக் கைவிடவில்லை. அவருடைய மிகச் சிறந்த புத்தகமான 'தி லாஸ் ஆஃப் மோஷன்' உருவானது இந்தக் காலத்தில்தான். ரகசியமாக எழுதினார் இதை. இதன் கையெழுத்துப் பிரதியைக் கடத்திக் கொண்டு போய் ஹாலந்தில் வெளியிட்டார்கள். ஆனால் இதன் அச்சிட்ட பிரதியைக் காணக் காலிலியோவினால் முடியவில்லை. சிறை வாழ்வில் கண் பார்வை பறி போயிற்று. ஒன்பது ஆண்டுகள் சிறை வாசத்துக்குப் பிறகு மரணப் படுக்கையில் இருந்த காலிலியோ இந்தப் புத்தகப் பிரதியை மார்போடு அணைத்துக் கொண்டே 1642 ஜனவரி 8ந் தேதி மீளா உறக்கத்தில் ஆழ்ந்தார்.

உண்மையைக் கூறியதற்காகத் துயரத்தைத் தேடிக் கொண்ட ஒரு மிகப் பெரிய விஞ்ஞானி காலிலியோ.



லே
ாலு!
கற்பனை:
வாண்டு
சித்திரம்:
செல்லம்
பாலு தன் அக்கா குழந்தையை அழாமல் பார்த்துக் கொள்ளுகிறான்.
டேய், சின்னப் பயலே! அழக் கூடாது!... இதோ பாரு கிலு... கிலு... கிலு...
வீல்...ல்...
என் கோமாளித் தனம் குழந்தையைப் பயமுறுத்திட்டதோ? இந்தா பாருடா கிலுகிலுப்பை கல... கல... கல...
ஓ... ஓ... ஹோ!
மா...மா... மியாவ்...
ஓ! உனக்குப் பூனை பிடிக்குமா? இரு இதோ அந்த ரோஸியைப் புடிச்சுண்டு வரேன். நம்ம வீட்டுப் பூனைதான்.
ஏய், ரோஸி! ரோ...ா...ஸீ... எங்கே ஓடறே? வா இப்படி...
ஐயோ... ஓ... ஓவ்...!
அம்மாடி! என்னை யார் இப்படி அடிச்சது? பூனை எங்கே? இல்லேன்னு பூனையை மணிப் பயலுக்குக் கொண்டு வரணும் போலே...
ஐடியா! மணிப் பயலுக்குச் சின்னப் பூனை பிடிச்சுதுன்னு, இந்தப் புலி ரொம்ப ரொம்பப் பிடிக்கணும்!


மணி...மணி... இதோ பார்! பெரிய்ய பூனை. ஒவ்... வவ்...வவ்...எப்படி உறுமல்?
இதென்ன சங்கடம்? அழுகை அதிகமாயிட்டுதே. புலித் தோலும் பயன் படலியே.
வில்...வில்... வீ...ல்...
கிர்...ர்...ள்... ளொள்...
ஐயோ, என்ன ஆச்சு? யார் என் மேலே இப்படி வந்து விழுறாங்க?
ளொள்... கிர்...ர்... உர்...
வள்...ள்ள்...ள்
ளொள்...ளொள்...
கிர்...ர்... ர்...
வா..ப்... வா..ப்...வள்..
என்னுடைய அருமையான புலித் தோல் விரிப்பு பாழாய்ப் போச்சு. இந்தா... ஆ...சீ...ஓடு... ஓடு...
வாடா வா, சாயந்திரம் அப்பா வரட்டும், என் புலித் தோலைப் பாழ் பண்ணினது போலவே உன் முதுகுத் தோலையும் உரிச்சுடச் சொல்றேன்.
சிரிப்பைப் பாரு சிரிப்பை. எதுக்காக இப்போ யாரைப்பாத்து இப்படி இளிக்கிறே? மொரையைப் பாரு...

தெரியுமா?

306. ஐக்கிய அமெரிக்காவில் மொத்தம் எத்தனை ராஜ்யங்கள் உள்ளன?

307. கீழ்க்கண்டவை எந்த நாடுகளில் இருக்கின்றன? (அ) ஹாம்பர்க் (ஆ) டாலடோ (இ) நேபிள்ஸ் (ஈ) ஜூரிச் (உ) இன்வெர்னஸ்.

308. கீழ்க்கண்ட உணவுப் பொருள்கள் எந்த நாட்டோடு தொடர்புடையவை? (அ) ஸ்பாகட்டி (ஆ) மசாலா கறி (இ) வோட்கா (ஈ) போடீன்.

309. மீன்களுக்கான லத்தீன் வார்த்தை என்ன தெரியுமா?

310. ஆசியாவுக்கு வெளியேயுள்ள மலைகளில் மிக உயரமானது எது?

311. மிஸோஜனிஸ்ட் என்றால் என்ன பொருள்?

312. தாரிலிருந்து உணவுப் பொருள்களுக்கு இனிப்பூட்டும் ஒரு பொருள் தயாரிக்கப்படுகிறது. அதன் பெயரென்ன?

313. காற்றடைக்கப்பட்ட சைக்கிள் டயரைக் கண்டுபிடித்தது யார்?

314. இயேசு பிரான் பிறந்த இடம் எது தெரியுமா?

315. தென் அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய நாடு எது?

316. ஐக்கிய அமெரிக்காவின் முதன் ஜனாதிபதி யார்?

317. ஐரோப்பாவின் மிக உயரமான மலை எது?

318. 1930ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் எது?

319. ஒரு மீனுக்கு மூன்று இருதயங்கள் உள்ளன. அது எந்த மீன் தெரியுமா?

320. புராதன கிரேக்கர்களின் கடவுளரில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் கடவுள் யார்?

321. எந்திர சக்தியை மின்சக்தியாக மாற்றித் தரும் கருவிக்கு என்ன பெயர்?

322. சிசிலியிலுள்ள மிக உயரமான மலையின் பெயர் என்ன?

323. மிக மிகக் கடுமையான உறைபனி நிலை ஆர்க்டிக்கிலா, அண்டார்க்டிக்கிலா?

324. ஆர்க்டிக் இருப்பது உலகின் வடபகுதியிலா, தென் பகுதியிலா?

325. காற்றின் வேகத்தை அளவிடும் கருவியின் பெயர் என்ன?

தெரியுமே!

306. ஐம்பது. 307. (அ) ஜெர்மனி. (ஆ) ஸ்பெயின். (இ) ஸ்விட்ஸர்லாந்து. (ஈ) ஸ்காட்லாந்து. 308. (a) இத்தாலி. (b) இந்தியா. (c) ரஷ்யா. (d) அயர்லாந்து. 309. பிஸ்ஸஸ். 310. அகான்கா குவா. 23,035 அடிகள். 311. பெண்களை வெறுப்பவன். 312. சாகரின். 313. டன்லப். 314. பெத்லெஹெம். 315. பிரேசில். 316. ஜார்ஜ் வாஷிங்டன். 317. மான்ட் பிளாங்க். 318. ப்ளூடோ. 319. கட்டில் ஃபிஷ். 320. ஸீஸ். 321. டைனமோ அல்லது ஜெனரேட்டர். 322. எட்னா 10,794 அடிகள். 323. அண்டார்க்டிக்கில். 324. வட பகுதியில். 325. அனமா மீட்டர்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்.

வாழ்வே ஆவலின் நிறைவேற்றம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்... நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுறுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லிவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



SIMOES-AG-10-TAM

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/ லிவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக்—
இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.


ருசியானவை...அருமையானவை...பிரமாதமானவை
25 பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
25 Paise
புதிய பார்லே பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும் ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில் ருசிமிக்க 13 மிட்டாய்கள்—குறைந்த விலை கொண்ட கையடக்கமான பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்—பழரசச் சுவையை அனுபவியுங்கள்